# பகுதி-அ (தமிழ் தகுதி தேர்வு)

## Part-A (Tamil Eligibility Test)

**வினாக்கள் : 1–100** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 1–100** **Total Marks : 150**

1. இரு வினைகளின் பொருள் வேறுபாடு
   அருந்து – அறுந்து
   (A) கூடி – துண்டுபட்டு
   (B) குடி – துண்டுபட்டு
   (C) துண்டுபட்டு – குடி
   (D) துண்டுபட்டு – கூடி
   (E) விடை தெரியவில்லை

2. ஒற்றுப்பிழையற்ற தொடரைக் கண்டறிக.
   (A) ஆற்று மணலுடன் சுண்ணாம்பைச் சேர்த்துச் சுவரைச் சமப்படுத்துவர்
   (B) ஆற்று மணலுடன் சுண்ணாம்பைச் சேர்த்து சுவரை சமப்படுத்துவர்
   (C) ஆற்று மணலுடன் சுண்ணாம்பை சேர்த்துச் சுவரை சமப்படுத்துவர்
   (D) ஆற்று மணலுடன் சுண்ணாம்பை சேர்த்துச் சுவரைச் சமப்படுத்துவர்
   (E) விடை தெரியவில்லை

3. எழுத்துப் பிழையற்ற தொடரினைத் தெரிவு செய்க.
   (A) குழலியை பாடத் தெரியும்
   (B) குழலியும் பாடத் தெரியும்
   (C) குழலியால் பாடத் தெரியும்
   (D) குழலிக்குப் பாடத் தெரியும்
   (E) விடை தெரியவில்லை

4. அடைப்புக்குள் உள்ள சொற்களைக் கோடிட்ட இடங்களில் நிரப்புக.
   இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் ________ (திகழ்)
   (A) திகழ்கிறது
   (B) திகழும்
   (C) திகழ்ந்த
   (D) திகழாது
   (E) விடை தெரியவில்லை

5. “நீர்வளம் பெருக்கி நிலவளம் விரிக்க...... ” இதில் பெருக்கி என்பதன் எதிர்ச்சொல் யாது ?

(A) சுருக்கி (B) உருக்கி

(C) நறுக்கி (D) சிறுக்கி

(E) விடை தெரியவில்லை

6. ‘மேதி’ என்பதன் எதிர்ச்சொல்

(A) பசு (B) கரடி

(C) சிங்கம் (D) புலி

(E) விடை தெரியவில்லை

7. ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல் அறிக.

(A) Thread – தையல் (B) Stitch – நூல்

(C) Factory – ஆலை (D) Loom – பதனிடுதல்

(E) விடை தெரியவில்லை

8. ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல் அறிக.

(A) Morpheme – ஒலியன் (B) Phoneme – உருபன்

(C) Blackboard – கரும்பலகை (D) Conical Stone – நடுகல்

(E) விடை தெரியவில்லை

9. கீழ்க்காணும் சொற்களில் பெயரெச்சம் கண்டுபிடித்து சரியான விடையைத் தேர்வு செய்க.

நல்ல, படுத்து, மாட்டிய, கடந்து

(A) படுத்து, நல்ல (B) நல்ல, மாட்டிய

(C) மாட்டிய, கடந்து (D) படுத்து, கடந்து

(E) விடை தெரியவில்லை

10. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

பெயரைக் கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சம். இது ________ காலத்திலும் வரும்.

(A) 4 (B) 2

(C) 3 (D) 1

(E) விடை தெரியவில்லை

11. வேர்ச்சொல்லுக்கேற்ற வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடுத்தெழுதுக.

படி —

(A) படித்த (B) படித்து

(C) படித்தவர் (D) படிய

(E) விடை தெரியவில்லை

12. படி — வேர்ச்சொல்லை வினையெச்சமாக்குக.

(A) படித்து (B) படித்த

(C) படிக்கின்ற (D) படித்தல்

(E) விடை தெரியவில்லை

13. வேர்ச்சொல்லை வினையெச்சமாக மாற்றுக :

"பார்"

(A) பார்த்த (B) பார்த்து

(C) பார்த்தல் (D) பார்த்தான்

(E) விடை தெரியவில்லை

14. கேட்டான் – வேர்ச்சொல் தருக.

(A) கேட்டு
(B) கேட்டல்
(C) கேள்வி
(D) கேள்
(E) விடை தெரியவில்லை

15. கீழ்க்கண்டவற்றுள் தவறான வேர்ச்சொல் இணையைக் கண்டறிக.

(A) வாழ்க – வாழ்க்கை
(B) கேள் – கேட்டார்
(C) போ – போனான்
(D) நட – நடக்கிறது
(E) விடை தெரியவில்லை

16. ஒருமை பன்மை அறிந்து சரியான தொடரைத் தெரிவு செய்க.

(A) அது மரம் அல்ல; கம்பம்
(B) அவை பறவைகள் அன்று; பூக்கள்
(C) அவர்கள் அடிமைகள் அல்லர்; போராளிகள்
(D) அவன் திருடன் அல்ல; தீரன்
(E) விடை தெரியவில்லை

17. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு.

வினா __________ வகைப்படும்.

(A) எத்தனை
(B) யாருக்கு
(C) எப்படி
(D) யாது
(E) விடை தெரியவில்லை

18. மெல்லினத்திற்கான இன எழுத்து இடம் பெறாத சொல் எது?

(A) திங்கள்
(B) சந்தனம்
(C) கிண்ணம்
(D) அம்பு
(E) விடை தெரியவில்லை

19. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(1) கடலுக்கு வேறு பெயர் (பரவை/பறவை)
(2) கதவை மெல்லத் __________ (திறந்தான்/திரந்தான்)

(A) பறவை, திறந்தான்
(B) பரவை, திரந்தான்
(C) பறவை, திரந்தான்
(D) பரவை, திறந்தான்
(E) விடை தெரியவில்லை

20. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

'தானொரு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________

(A) தாண் + ஒரு
(B) தான் + ஒரு
(C) தாண் + னொரு
(D) தானே + ஒரு
(E) விடை தெரியவில்லை

21. குறில் – நெடில் மாற்றம் பொருள் வேறுபாடு எழுதுக.

முளை – மூளை

(A) செடி – தலைக்குள் உள்ள பகுதி
(B) இடம் – தலைக்குள் உள்ள பகுதி
(C) விதையின் முளை – தலைக்குள் உள்ள பகுதி
(D) அறுவடை – தலைக்குள் உள்ள பகுதி
(E) விடை தெரியவில்லை

22. சரியான மரபுச் சொல்லை தேர்வு செய்க.

கூகை ___________

(A) கூவும்
(B) கொக்கரிக்கும்
(C) அகவும்
(D) குழறும்
(E) விடை தெரியவில்லை

23. சரியான விடையைத் தேர்க.

(A) மண் + அழகு = மண்ணளகு
(B) மண் + அழகு = மண்ணலகு
(C) மண் + அழகு = மண்ணிழகு
(D) மண் + அழகு = மண்ணழகு
(E) விடை தெரியவில்லை

24. சேர்த்தெழுதுக.

குற்றம் + இல்லாதவர்

(A) குற்றமில்லாதவர்
(B) குற்றம் இல்லாதவர்
(C) குற்றமல்லாதவர்
(D) குற்றம் அல்லாதவர்
(E) விடை தெரியவில்லை

25. பிரித்தெழுதுக.

'அவ்வுருவம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ___________

(A) அவ்வு + உருவம்
(B) அவ் + வுருவம்
(C) அ + உருவம்
(D) அ + வுருவம்
(E) விடை தெரியவில்லை

26. நாவாய் என்னும் சொல்லுக்கு உரிய பெயர்கள்

(A) கமலம், கஞ்சம், முளரி

(B) பங்கயம், தோணி, கமலம்

(C) வங்கம், கஞ்சம், பங்கயம்

(D) வங்கம், தோணி, கலம்

(E) விடை தெரியவில்லை

27. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்கு.

நான் என்னுடைய பாடப் புத்தகத்தை முதல் பக்கம் முதல் கடைசிப்பக்கம் __________ முழுவதும் படித்து முடித்தேன்.

(A) வரை

(B) ஆனாலும்

(C) எனினும்

(D) மற்றும்

(E) விடை தெரியவில்லை

28. கப்பல் என்னும் பொருள் தரும் சொற்களைத் தேர்க

(A) வருடம், மாதம்

(B) நாவாய், வங்கம்

(C) விடம், சக்கரம்

(D) சிற்பி, முத்து

(E) விடை தெரியவில்லை

29. ஒரு – ஓர் சரியாக அமைந்த தொடரைத் தேர்ந்தெடுக்க.

(A) ஒன்று ஆசிரியர் எல்லா மாணவர்களுக்கும் பாடம் சொல்லிக் கொடுத்தார்.

(B) ஒரு ஆசிரியர் எல்லா மாணவர்களுக்கும் பாடம் சொல்லிக் கொடுத்தார்.

(C) ஓர் ஆசிரியர் எல்லா மாணவர்களுக்கும் பாடம் சொல்லிக் கொடுத்தார்.

(D) ஓர் ஆசிரியர் எல்லா மாணவர்களுக்கும் பாடம் சொல்லிக் கொடுத்தனர்.

(E) விடை தெரியவில்லை

30. ஊர் பெயர்களின் மரூஉவை எழுதுக.

புதுச்சேரி

(A) புதுகை (B) புதுவை

(C) புதுமை (D) புத்தூர்

(E) விடை தெரியவில்லை

31. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க.

மேலலார் செல்வமே போல்

(A) தலைநிமிர்ந்து நிற்பது போல்

(B) தலை தாழ்த்தி வணங்குவது போல்

(C) மேசை மேல் வைக்கப்பட்ட செல்வத்தைப் போல்

(D) மேலாளரின் செல்வத்தைப் போல

(E) விடை தெரியவில்லை

32. சொல்லிற்கு இணையான வேறு சொல் கண்டறிக.

நனி

(A) விளம்பு (B) பார்

(C) குழவி (D) தவ

(E) விடை தெரியவில்லை

33. நாட்டு மக்களுடைய __________ ஒழிக்க வேண்டும்.

(A) வறுமைகளை (B) வறுமை

(C) வறுமையை (D) ஏழ்மைகளை

(E) விடை தெரியவில்லை

34. இரு பொருள் தருக.

மேவலால்

(A) விளித்தல், கேட்டல்

(B) ஓடுதல், குதித்தல்

(C) கற்றல், கேட்டல்

(D) பொருந்துதலால், பெறுதலால்

(E) விடை தெரியவில்லை

35. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க.

நீலம்; கோமேதகம்; மாணிக்கம்; வைரம்; பவளம்; வைடூரியம்; முத்து; புஷ்பராகம்; மரகதம்

(A) மரகதம்; நீலம்; பவளம்; முத்து; வைடூரியம்; புஷ்பராகம்; மாணிக்கம்; வைரம், கோமேதகம்

(B) கோமேதகம்; நீலம்; பவளம்; புஷ்பராகம்; மரகதம்; மாணிக்கம்; முத்து; வைடூரியம்; வைரம்

(C) மாணிக்கம்; வைரம்; புஷ்பராகம்; மரகதம்; வைடூரியம்; நீலம்; முத்து; கோமேதகம்; பவளம்

(D) நீலம்; கோமேதகம்; முத்து; பவளம்; புஷ்பராகம்; மரகதம்; வைரம்; வைடூரியம்; மாணிக்கம்

(E) விடை தெரியவில்லை

36. பொருந்தாச் சொல்லை எடுத்தெழுதுக.

(A) பொருள்

(B) இடம்

(C) காலம்

(D) பேருந்து

(E) விடை தெரியவில்லை

37. ஒரு பொருள் தரும் பல சொற்களை எழுதுக.

(A) அண்டம், அகிலம்

(B) வானம், நிலவு

(C) பூமி, மண்

(D) அண்டம், சூரியன்

(E) விடை தெரியவில்லை

38. கேள்வியினான் – என்பதன் சரியான பொருள்.

(A) பொறுத்தருளுமாறு
(B) ஞானமயமாகிய
(C) சொற் சுவை
(D) நூல் வல்லான்
(E) விடை தெரியவில்லை

39. ஓரெழுத்து ஒரு மொழியின் பொருளைக் கண்டறிக.

ஏ

(A) அம்பு
(B) சோலை
(C) கடவுள்
(D) மூப்பு
(E) விடை தெரியவில்லை

40. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுக.

ஐயம்

(A) தெளிவு
(B) பணிவு
(C) பயம்
(D) அச்சம்
(E) விடை தெரியவில்லை

41. வினாக்குறி இடம் பெறும் தொடரைக் கண்டறிக.

(A) இராமன், "நாளை வருகிறேன்" என்றான்
(B) 'ஏ' என்று சொன்னான்
(C) வருக வருக!
(D) நீ வருவாயா?
(E) விடை தெரியவில்லை

42. வியப்புக்குறியைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | பாம்பு பாம்பு | 1. | வியப்பு |
| (b) | வருக வருக | 2. | வாழ்த்து |
| (c) | வாழ்க வாழ்க | 3. | வரவேற்றல் |
| (d) | என்னே, இதன் பெருமை | 4. | அவலம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

43. 'முகவரி இறுதியில்' இடம் பெறும் நிறுத்தற்குறியைக் கண்டறிக.

(A) முக்காற்புள்ளி
(B) முற்றுப்புள்ளி
(C) காற்புள்ளி
(D) அரைப்புள்ளி
(E) விடை தெரியவில்லை

44. 'ஆதலால்' என்னும் சொல்லின்பின் எவ்வகை நிறுத்தற்குறி இடுதல் வேண்டும்?

(A) முற்றுப்புள்ளி
(B) முக்காற்புள்ளி
(C) அரைப்புள்ளி
(D) காற்புள்ளி
(E) விடை தெரியவில்லை

45. சரியான தொகைமரபைக் கண்டறிக.

(A) ஆநிரை
(B) ஆத்திரள்
(C) ஆக்கூட்டம்
(D) ஆமந்தை
(E) விடை தெரியவில்லை

46. ஆண்பால் பெயர்ச்சொல்லைக் கண்டறிக

(A) அவன்
(B) அரசி
(C) அவர்கள்
(D) அது
(E) விடை தெரியவில்லை

47. கால வழுவைக் கண்டறிக.

(A) கரிகாலன் நாளை வருவான்
(B) கரிகாலன் நேற்று வந்தான்
(C) கரிகாலன் இன்று வருகிறான்
(D) கரிகாலன் நாளை வந்தான்
(E) விடை தெரியவில்லை

48. சரியான ஒன்றன்பால் பெயர்ச்சொல்லைத் தேர்ந்தெடு.

(A) மலைப்பாம்பு ஊர்ந்தது
(B) மலைப்பாம்புகள் ஊர்ந்தது
(C) மலைப்பாம்பு ஊர்ந்தன
(D) மலைப்பாம்புகள் ஊர்ந்தனர்
(E) விடை தெரியவில்லை

49. பெண்பாலைத் தெரிவு செய்க.

(A) அது
(B) அவை
(C) அரிசி
(D) அரசி
(E) விடை தெரியவில்லை

50. ஒருமை பன்மை பிழை :
பன்மை சரியாகப் பயின்றுவரும் தொடரைத் தேர்க :

(A) விண்கலங்கள் விண்ணில் பறந்தன
(B) விண்கலம் விண்ணில் பறந்தன
(C) விண்கலங்கள் விண்ணில் பறந்தது
(D) விண்கலம் விண்ணில் பறந்தது
(E) விடை தெரியவில்லை

51. ஒருமை – பன்மை பிழை

அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காகத் __________ உழைப்பை நல்கினார்.

(A) தமது
(B) எமது
(C) எனது
(D) உமது
(E) விடை தெரியவில்லை

52. 'அவன் படித்தான்' – இது எவ்வகை வினை?

(A) செய்வினை
(B) பிறவினை
(C) செயப்பாட்டு வினை
(D) தன்வினை
(E) விடை தெரியவில்லை

53. கவிதை சீதாவால் இயற்றப்பட்டது – இது எவ்வகை வாக்கியம்?

(A) தன் வினை
(B) பிற வினை
(C) செய் வினை
(D) செயப்பாட்டு வினை
(E) விடை தெரியவில்லை

54. சொற்களை ஒழுங்குபடுத்துக.

(A) கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போகாது
(B) தண்ணீரை கிணற்று வெள்ளம் கொண்டு போகாது
(C) வெள்ளம் தண்ணீரை கிணற்றுக் கொண்டு போகாது
(D) கொண்டு போகாது கிணற்று வெள்ளம் தண்ணீரை
(E) விடை தெரியவில்லை

55. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக;

(சரியான வாக்கியம் கண்டறிதல்)

(A) அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி வழங்குதல்

(B) நெல்லிக்கனி அதியமான் ஔவைக்கு வழங்குதல்

(C) அதியமான் நெல்லிக்கனி வழங்குதல் ஔவைக்கு

(D) அதியமான் நெல்லிக்கனி ஔவைக்கு வழங்குதல்

(E) விடை தெரியவில்லை

56. கலைச் சொல் அறிக.

Embossed Sculpture

(A) அகழாய்வு

(B) புடைப்புச் சிற்பம்

(C) நடுகல்

(D) பண்பாட்டுக் குறியீடு

(E) விடை தெரியவில்லை

57. கலைச்சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல்.

Twitter

(A) புலனம்

(B) கீச்சகம்

(C) கட்செவி

(D) படவரி

(E) விடை தெரியவில்லை

58. E-learning Web Site என்பதன் கலைச் சொல் எழுதுக.

(A) உலவி

(B) இயங்கு இணைய தளம்

(C) இணைய வரலாறு

(D) மின்கற்றல் இணைய தளம்

(E) விடை தெரியவில்லை

59. கலைச் சொல் தேர்க.

Electronic Effects

(A) பண்பலை

(B) மின்னணு ஊடகம்

(C) எதிரொலி

(D) மின்னணு உத்திகள்

(E) விடை தெரியவில்லை

60. கலைச் சொல்லை அறிக.

Forestry

(A) விலங்கியல்

(B) காடு

(C) வனவியல்

(D) அளவீட்டியல்

(E) விடை தெரியவில்லை

61. கலைச் சொல் தேர்க.

Member of Legislative Assembly

(A) சட்டமன்ற உறுப்பினர்

(B) சட்டமன்ற ஆய்வாளர்

(C) சட்டமன்ற உதவியாளர்

(D) சட்டமன்ற மேலாளர்

(E) விடை தெரியவில்லை

62. கலைச்சொல் – கண்டறிக.

"Symbolism"

(A) புள்ளியியல்

(B) வடிவவியல்

(C) வட்டவியல்

(D) குறியீட்டியல்

(E) விடை தெரியவில்லை

63. கலைச்சொல் அறிக.

Biotherapy

(A) உயிரியல் (B) உயிர்க்கூறியல்

(C) உயிர் மருத்துவம் (D) உயிர் வகை

(E) விடை தெரியவில்லை

64. கலைச்சொல் அறிக.

Thesis

(A) கையேடு (B) ஆய்வேடு

(C) அறிவாளர் (D) சின்னம்

(E) விடை தெரியவில்லை

65. கலைச்சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தெரிவு செய்க.

Missile

(A) ஏவுகணை (B) ஏவு ஊர்த்தி

(C) கடல்மைல் (D) பதிவிறக்கம்

(E) விடை தெரியவில்லை

66. ஏழை இளம் விதவைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் டாக்டர். தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண உதவித் திட்டம் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் பயனடைவதற்கான தகுதிகள்

(1) வருமான உச்ச வரம்பு உண்டு.

(2) மறுமணத்தின் போது மணமகளின் குறைந்தபட்ச வயது 20-ஆக இருக்க வேண்டும்.

(3) மறுமணம் செய்வதற்கான திருமண அழைப்பிதழ் தேவையில்லை.

(4) மறுமண நாளிலிருந்து 6 மாதத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

(A) கூற்று 3 மற்றும் கூற்று 2 சரி

(B) கூற்று 2 மற்றும் கூற்று 4 சரி

(C) கூற்று 1 மற்றும் கூற்று 3 சரி

(D) கூற்று 4 மற்றும் கூற்று 1 சரி

(E) விடை தெரியவில்லை

67. கீழ்க்கண்ட பழமொழியின் பொருளைத் தெரிவு செய்.

சொப்பனத்தில் கண்ட அரிசி சோத்துக்கு ஆகுமா?

(A) கனவு காணுங்கள்

(B) உயர்வான எண்ணங்கள் அவசியம்

(C) உழைப்பின்றி ஊதியமில்லை

(D) நேர்மறைச் சிந்தனை அவசியம்

(E) விடை தெரியவில்லை

68. கீழ்க்காணும் பழமொழியின் பொருளைத் தெரிவு செய்க.

அதிர அடிச்சா உதிர விளையும்

(A) முயற்சி திருவினையாக்கும்

(B) அடி உதவாமல் அண்ணன் தம்பி உதவ மாட்டார்கள்

(C) நெற்பயிருக்கு மழை அவசியம்

(D) கரும்பு தின்னக் கூலியா?

(E) விடை தெரியவில்லை

69. கீழ்க்கண்ட பழமொழியின் சரியான பொருளைக் கண்டறிக.

அவப்பொழுது போக்குவதிலும் தவப்பொழுது நல்லது.

(A) பணத்தை வீணாக்காமை

(B) உணவை வீணாக்காமை

(C) நேரத்தை வீணாக்காமை

(D) நல்ல நேரம் பார்ப்பது

(E) விடை தெரியவில்லை

70. மரபுத் தொடரைப் பொருளோடு பொருத்தி எழுதுக.

முதலைக் கண்ணீர்

(A) இயலாத செயல்

(B) உண்மையான அழுகை

(C) பொய்யான அழுகை

(D) விரைந்து செயல்படுதல்

(E) விடை தெரியவில்லை

71. மரபுத் தொடர்களைப் பொருளோடு எழுதுக.

கொடிகட்டிப் பறத்தல்

(A) புகழ்பெற்று விளங்குதல்
(B) புகழ் இல்லாமை
(C) நீண்ட காலமாக வாழ்தல்
(D) விரைந்து பறத்தல்
(E) விடை தெரியவில்லை

72. மரபுத் தொடரைப் பொருளோடு பொருத்துக.

கல்லில் நார் உரித்தல்

(A) ஆராய்ந்து பாராமல்
(B) இயலாத செயல்
(C) எண்ணிச் செயல்படாமை
(D) புகழ் பெறுதல்
(E) விடை தெரியவில்லை

73. உவமைத் தொடரின் பொருளைத் தெரிவு செய்க.

விழலுக்கு இறைத்த நீர் போல

(A) பயனற்ற செயல்
(B) பயனுள்ள செயல்
(C) தற்செயல் நிகழ்வு
(D) எதிர்பாரா நிகழ்வு
(E) விடை தெரியவில்லை

74. 'உள்ளங்கை நெல்லிக்கனி போல' – என்னும் உவமைத்தொடர் விளக்கும் கருத்து என்ன?

(A) மறைந்திருப்பது
(B) வெளிப்படையாக இருப்பது
(C) சேர்ந்திருப்பது
(D) பக்குவமாக நடப்பது
(E) விடை தெரியவில்லை

75. ‘எலியும் பூனையும் போல’ — என்ற உவமைத் தொடர் விளக்கும் கருத்து.

(A) ஓடிவிளையாடுதல்
(B) பகைமை பாராட்டுதல்
(C) நட்புடன் பழகுதல்
(D) ஒற்றுமையாக இருத்தல்
(E) விடை தெரியவில்லை

கீழ்க்கண்ட பத்தியைப் படித்து வினாவிற்குரிய விடையைத் தேர்ந்தெடு :

உலகுக்கு இந்தியா அளித்த மிகப் பெரிய கொடையாக யோகா கலை உள்ளது என்று இந்தியாவுக்கான நார்வே தூதர் மே-எலின் ஸ்டெனர் புகழாரம் சூட்டியுள்ளார். யோகாவின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளும் வகையில் சர்வதேச யோகா தினம் ஆண்டுதோறும் ஜூன் 21-ஆம் தேதி கடைபிடிக்கப்படுகிறது. கடந்த 2023-ஆம் ஆண்டில் பிரதமர் மோடி, நியூயார்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை தலைமையகத்தில் சிறப்பு யோகா பயிற்சியை முன்னின்று நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

76. உலகுக்கு இந்தியா அளித்த மிகப் பெரிய கொடை எது?

(A) கால்பந்து
(B) கபடி
(C) யோகா
(D) மட்டைப்பந்து
(E) விடை தெரியவில்லை

77. எப்பொழுது சர்வதேச யோகா தினம் கொண்டாடப்படுகிறது?

(A) ஜூன் 24
(B) ஜூன் 21
(C) ஜூன் 26
(D) ஜூன் 5
(E) விடை தெரியவில்லை

78. யார் புகழாரம் சூட்டியுள்ளார்?

(A) மே-எலின் ஸ்டெனர்
(B) கிரண் ரிஜிஜீ
(C) விஜயதரணி
(D) பொன்முடி
(E) விடை தெரியவில்லை

79. எந்த ஆண்டில் பிரதமர் யோகா பயிற்சியை முன்னின்று நடத்தினார்?

(A) 2020 (B) 2024

(C) 2021 (D) 2023

(E) விடை தெரியவில்லை

80. எந்த நாட்டின் சபையில் யோகா நடந்தது?

(A) அமெரிக்கா (B) நியூயார்க்

(C) ஜப்பான் (D) ஸ்வீடன்

(E) விடை தெரியவில்லை

81. Distribution Register என்று அழைக்கப்பெறும் பதிவேடு

(A) நிலுவைப் பட்டியல் (B) பகிர்மானப் பதிவேடு

(C) அலுவலக ஆணைப் பதிவேடு (D) திருத்தப் பதிவேடு

(E) விடை தெரியவில்லை

82. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிந்து எழுதுக.

'CABINET'

(A) அமைச்சரவை (B) மக்களவை

(C) சட்ட சபை (D) மாநிலங்களவை

(E) விடை தெரியவில்லை

83. Millets – ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்.

(A) நோய் (B) ஒவ்வாமை

(C) நுண்ணுயிர் முறி (D) சிறுதானியங்கள்

(E) விடை தெரியவில்லை

84. Knitting – என்ற சொல்லின் தமிழ்ச் சொல்.

(A) கைவினைஞர்
(B) பின்னுதல்
(C) கூடை முடைதல்
(D) சடங்கு
(E) விடை தெரியவில்லை

85. Reform – என்ற சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

(A) பகுத்தறிவு
(B) தத்துவம்
(C) சீர்திருத்தம்
(D) நேர்மை
(E) விடை தெரியவில்லை

86. பறம்பு மலையில் நடந்த விழாவில், குன்றக்குடி அடிகளாரிடம் 'கவியரசு' என்ற பட்டத்தைப் பெற்றவர் யார்?

(A) பாவாணர்
(B) முடியரசன்
(C) பாரதிதாசன்
(D) தாரா பாரதி
(E) விடை தெரியவில்லை

87. தாரா பாரதியின் இயற்பெயர் யாது?

(A) ராதாகிருஷ்ணன்
(B) ரவிக்கிருஷ்ணன்
(C) கோபிக்கிருஷ்ணன்
(D) முத்தையா
(E) விடை தெரியவில்லை

88. 'பாவேந்தர்' பாரதிதாசன் பிறந்த ஆண்டு எது?

(A) 1881
(B) 1871
(C) 1891
(D) 1861
(E) விடை தெரியவில்லை

89. பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் யாது?

(A) ச. தண்டபாணி
(B) மா. அரங்கநாதன்
(C) முத்தையா
(D) துரை. மாணிக்கம்
(E) விடை தெரியவில்லை

90. பல்வேறு சிறப்பியல்புகளைக் கொண்டு, அனைத்து வளமும் உண்டென்று சொன்னதோடு, தமிழ்ச்சொல் வளம் மிக்கது எனக் கூறியவர் யார்?

(A) பாவலரேறு பெருஞ்சித்திரனார்
(B) சி. இலக்குவனார்
(C) முடியரசன்
(D) தேவநேயப்பாவாணர்
(E) விடை தெரியவில்லை

91. ஆற்றில் விட்டுச் சென்ற ஓலைச்சுவடிகளை தேடி எடுத்து வந்தவர் __________

(A) பாரதியார்
(B) அகத்தியலிங்கம்
(C) உ.வே. சாமிநாதர்
(D) பாரதிதாசன்
(E) விடை தெரியவில்லை

92. பின்வருவனவற்றுள் எம்மொழி, தென் திராவிட மொழிகளில் ஒன்று?

(A) கன்னடம்
(B) தெலுங்கு
(C) கோண்டா
(D) மண்டா
(E) விடை தெரியவில்லை

93. உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர் யார்?

(A) நாமக்கல் கவிஞர்
(B) பாரதிதாசன்
(C) தேவநேயப்பாவாணர்
(D) கண்ணதாசன்
(E) விடை தெரியவில்லை

94. பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் __________

(A) முன்றுரை அரையனார்
(B) காரியாசான்
(C) நக்கீரன்
(D) வடுகநாதர்
(E) விடை தெரியவில்லை

95. ‘முதுமொழிக்காஞ்சி’ – நூலின் ஆசிரியர்

(A) நப்பூதனார்
(B) மதுரைக் கூடலூர் கிழார்
(C) முன்றுரை அரையனார்
(D) அகத்தியர்
(E) விடை தெரியவில்லை

96. குறட்பாவின் அணியைக் கண்டறிக.

பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.

(A) உவமையணி
(B) எடுத்துக்காட்டு உவமையணி
(C) உருவகம்
(D) இல்பொருள் உவமையணி
(E) விடை தெரியவில்லை

97. சரியாக சீர் அமையப் பெற்ற குறளைக் கண்டறிக.

(A) செயல் எண்ணத்தீர இருள்
(B) இருள்தீர எண்ணிச் செயல்
(C) எண்ணிச் செயல் தீரஇருள்
(D) தீரஇருள் செயல் எண்ணி
(E) விடை தெரியவில்லை

98. ‘அழுக்காறு’ என்பதன் பொருள் __________

(A) பொறாமை

(B) பேராசை

(C) சினம்

(D) பெருமை

(E) விடை தெரியவில்லை

99. பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்தெழுதுக.

விருந்தினரின் முகம் எப்போது வாடும்?

(A) நம் முகம் மாறினால்

(B) நம் வீடு மாறினால்

(C) நம் முகவரி மாறினால்

(D) நாம் நன்கு வரவேற்றால்

(E) விடை தெரியவில்லை

100. எதிர்ச்சொல் தருக.

ஒழுக்கம் × __________

(A) இழுக்கம்

(B) இரக்கம்

(C) வலுக்கும்

(D) விழுப்பம்

(E) விடை தெரியவில்லை

# பகுதி-ஆ (பொது அறிவு)

## Part-B (General Studies)

**வினாக்கள் : 101–200** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 101–200** **Total Marks : 150**

101. Which of the following statements are true about the functions of ecosystem?
சுற்றுச்சூழலின் செயல்பாடுகளைப் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது உண்மை?

(i) Energy flow is the key function
ஆற்றல் ஓட்டம் முக்கிய செயல்பாடு ஆகும்.

(ii) The flow of energy in the ecosystem is through food chain and food web
சுற்றுச்சூழலில் ஆற்றல் ஓட்டம், உணவு சங்கிலி மற்றும் உணவு வலை மூலம் நடைபெறுகிறது.

(iii) Transfer of energy not follows thermodynamic laws
ஆற்றல் பரிமாற்றம் வெப்ப இயக்கவியல் விதிகளைப் பின்பற்றுவதில்லை.

(A) (i) only
(i) மட்டும்

(B) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டும்

(C) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(D) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

102. Choose the correct answer :
சரியான விடையை தேர்ந்தெடு :

Assertion : Haemoglobin contains Iron.
கூற்று : ஹீமோகுளோபினில் இரும்பு உள்ளன.

Reason : Iron deficiency leads to anemia.
காரணம் : இரும்புசத்து குறைவினால் இரத்த சோகை உருவாகின்றது.

(i) Both Assertion and Reason are true – Reason is the correct explanation of Assertion
கூற்று மற்றும் காரணம் சரி. காரணம், கூற்றிற்கு சரியான விளக்கம்.

(ii) Both Assertion and Reason are true – Reason not the correct explanation of Assertion
கூற்று மற்றும் காரணம் சரி. காரணம், கூற்றிற்கு சரியான விளக்கம் அல்ல.

(iii) Assertion is true – Reason is false
கூற்று சரியானவை, காரணம் தவறு

(iv) Assertion and Reason are false
கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

(A) (i) is correct
(i) சரி

(B) (ii) is correct
(ii) சரி

(C) (iii) is correct
(iii) சரி

(D) (iv) is correct
(iv) சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

103. Find out the correct statements from the following :
சரியான சொற்றொடர்/சொற்றொடர்களைக் கண்டறிக :

(i) Jumping genes in maize were discovered by Barbara Mc. Clintock
தாவும் ஜீன்களை சோளத்தில் கண்டறிந்தவர் பார்பரா மெக். கிளிண்டாக்

(ii) The name plasmid was first used by G.J. Mendel
பிளாஸ்மிட் என்ற பெயர் முதன் முதலில் G.J. மெண்டல் அவர்களால் பயன்படுத்தப்பட்டது

(iii) The plasmid DNA replicates by semi-conservative method
பிளாஸ்மிடுகளின் டி.என்.ஏ.வானது பகுதி – பழமை பேணும் முறையில் இரட்டிப்படையும் தன்மையுடையது.

(iv) The retroviruses are exogenous, who genomes are made up of RNA.
ரெட்ரோ வைரஸ்கள் ஆர்.என்.ஏ. மரபுப் பொருளைக் கொண்ட புறவெளிப் பெருக்கமடைபவை

(A) (i) alone is correct
(i) மட்டுமே சரி

(B) (i) and (ii) are correct
(i) மற்றும் (ii) இரண்டும் சரி

(C) (i), (ii) and (iv) are correct
(i), (ii) மற்றும் (iv) சரியானவை

(D) (i), (ii), (iii) and (iv) are correct
(i), (ii), (iii) மற்றும் (iv) சரியானவை

(E) Answer not known
விடை தெரியவில்லை

104. Assertion [A] : Aqueous solution of hydrofluoric acid is weak acid.
கூற்று [A] : நீர்த்த ஹைட்ரோ புளோரிக் அமில கரைசலானது ஒரு வீரியம் குறைந்த அமிலம்

Reason [R] : The dissociation energy of H-F bond in HF molecule is high.
காரணம் [R] : H-F பிணைப்பின் பிரிகை ஆற்றல் அதிகம்.

(A) [A] is true, [R] is false
[A] சரி, ஆனால் [R] தவறு

(B) Both [A] and [R] are true, but [R] is not correct explanation of [A]
[A] மற்றும் [R] இரண்டும் சரி, ஆனால் [R] என்பது [A]விற்கு சரியான விளக்கமில்லை

(C) Both [A] and [R] are false
[A] மற்றும் [R] இரண்டும் தவறு

(D) Both [A] and [R] are true, [R] is the correct explanation of [A]
[A] மற்றும் [R] இரண்டும் சரி, மேலும் [R] என்பது [A]விற்கு சரியான விளக்கமாகும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

105. A circular road runs round a circular ground. If the difference between the circumference of the outer circle and inner circle is 66 metres, the width of the road is

ஒரு வட்டச் சாலை ஒரு வட்டமான மைதானத்தைச் சுற்றிச் செல்கிறது. வெளி வட்டம் மற்றும் உள் வட்டத்தின் சுற்றளவுக்கு இடையே உள்ள வித்தியாசம் 66 மீட்டர் எனில் சாலையின் அகலத்தைக் கண்டறிக.

(A) 5.25 m
5.25 மீ

(B) 7 m
7 மீ

(C) 10.5 m
10.5 மீ

(D) 21 m
21 மீ

(E) Answer not known
விடை தெரியவில்லை

106. The greenhouse effect in the earth's environment takes place because :

பூமியின் மேல் பசுமைக்குடில் விளைவு எதனால் ஏற்படுகிறது?

(A) the polar ice caps are melting
துருவ பனிக்கட்டிகள் உருகுதல்

(B) the atmosphere is transparent to IR at some wavelength and opaque to IR at other wavelengths
வளிமண்டலம் அகச்சிவப்புக் கதிர்களை குறிப்பிட்ட அலைநீளத்தில் அனுமதிப்பதும், ஒளிபுகாத்தன்மை ஒரு குறிப்பிட்ட அலைநீளத்தில் இருப்பதாலும்

(C) the atmosphere does not contain enough oxygen to block IR from the sun
சூரியனிலிருந்து வரும் அகச்சிவப்புக் கதிர்களைத் தடுக்க போதிய ஆக்சிஜன் இன்மை

(D) the ozone hole is growing, letting in more and more IR.
ஓசோன் துளை வளர்ந்து வருகிறதினால் அகச்சிவப்பு கதிர்களை அனுமதிக்கிறது.

(E) Answer not known
விடை தெரியவில்லை

107. From the following, identify the effects of "climate change"

பின்வருவனவற்றிலிருந்து "கால நிலை மாற்றத்தின்" விளைவை அடையாளம் காணவும்.

(i) hotter temperatures & increased drought
சூடான வெப்பநிலை மற்றும் அதிகரித்த வறட்சி

(ii) cooler temperature & more severe storms
குளிர்ச்சியான வெப்பநிலை மற்றும் கடுமையான புயல்கள்

(iii) a warming, rising ocean & more severe storms
கடல் வெப்பமயமாதல் மற்றும் கடுமையான புயல்கள்

(iv) more wars & increased drought
அதிக போர்கள் மற்றும் அதிகரித்த வறட்சி

(A) (i) and (ii)
(i) மற்றும் (ii)

(B) (i) and (iii)
(i) மற்றும் (iii)

(C) (ii) and (iii)
(ii) மற்றும் (iii)

(D) (i) and (iv)
(i) மற்றும் (iv)

(E) Answer not known
விடை தெரியவில்லை

108. On the ozone layer, the chlorofluoro hydro carbon has continuing their effect as
ஓசோன் மண்டலத்தின் மீது குளோரோ புளோரோ ஹைட்ரோ கார்பன் தொடர்ந்து ஏற்படுத்தும் விளைவு என்ன?

(A) Reactions use up by the Cl atoms formed by them leads to the degradation of ozone.
குளோரின் அணுக்களால் ஏற்படும் வினைகள் பயன்பாடு ஓசோனின் மண்டலத்தை வலுவிழக்கச் செய்கிறது.

(B) Their efficient absorption by water vapours of the atmosphere
அதன் வலுவான கவர்ந்திழுத்தலால் நீராவியை வளிமண்டலத்தில் கவருவது.

(C) In reactions, the chlorine atoms formed by them serves as catalysts leading to the degradation of ozone.
வினைகளில், குளோரின் அணுக்கள் உருவாக்க வினையூக்கியாகச் செயல்பட்டு ஓசோன் மண்டலத்தை வலுவிழக்கச் செய்கிறது.

(D) They are constantly produced in increasing quantities, globally.
உலகளவில் இதன் அளவு அதிகரித்துக் கொண்டே வருகிறது.

(E) Answer not known
விடை தெரியவில்லை

109. Which of the following statements are true about the Indus River System?
சிந்து நதி அமைப்பு பற்றி பின்வரும் கூற்றுகளில் எது உண்மை?

(i) The Indus River System is one of the world's largest system
சிந்து நதி அமைப்பு உலகின் மிகப் பெரிய அமைப்புகளில் ஒன்றாகும்.

(ii) The River flows for 709 km in India through Jammu and Kashmir
இந்த நதி இந்தியாவில் ஜம்மு காஷ்மீர் வழியாக 709 கி.மீ. பாய்கிறது.

(iii) The Yamuna is one of the tributaries of Indus River.
யமுனை சிந்து நதி அமைப்பின் துணை நதிகளில் ஒன்றாகும்.

(A) (i) only
(i) மட்டும்

(B) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(C) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டும்

(D) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

110. As per National Academy of Agricultural Sciences (NAAS) Report, _________ state of India reports high acidic soil.
தேசிய வேளாண் அறிவியல் அகாடமி (NAAS) அறிக்கையின்படி, __________ இந்திய மாநிலம் அதிக அமிலத்தன்மை கொண்ட மண்ணைக் கொண்டுள்ளது.

(A) Himachal Pradesh
இமாச்சல பிரதேசம்

(B) Gujarat
குஜராத்

(C) Kerala
கேரளா

(D) Haryana
ஹரியானா

(E) Answer not known
விடை தெரியவில்லை

111. Match the following International Airports with their city of Location :

பின்வரும் சர்வதேச விமான நிலையங்களை அவற்றின் நகரத்துடன் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Veer Savarkar<br>வீர் சாவர்க்கர் | 1. | Lucknow<br>லக்னோ |
| (b) | Dr. Babasaheb Ambedkar<br>டாக்டர். பாபாசாஹேப் அம்பேத்கர் | 2. | Port Blair<br>போர்ட் பிளேயர் |
| (c) | Chaudhary Charan Singh<br>சவுத்ரி சரண் சிங் | 3. | Varanashi<br>வாரணாசி |
| (d) | Lal Bahadur Shastri<br>லால் பகதூர் சாஸ்திரி | 4. | Nagpur<br>நாக்பூர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

112. Which of the given statement/s is/are true about the Second Khelo India Para Games 2025 (KIPG 2025)?

இரண்டாவது கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டிகள் 2025 (KIPG 2025) குறித்தான பின்வரும் கூற்றுக்களில் சரியானவற்றை எழுதுக.

(i) The Second edition of Khelo India Para Games 2025 was held in Haryana.
கேலோ இந்தியா, பாரா விளையாட்டுப் போட்டியின் இரண்டாவது நிகழ்வு 2025, ஹரியானாவில் நடைபெற்றது.

(ii) Haryana finished on top of the KIPG 2025 medal tally.
KIPG 2025 பதக்கப்பட்டியலில் ஹரியானா முதலிடத்தைப் பிடித்தது.

(iii) Tamilnadu finished second in the overall standing.
ஒட்டுமொத்தப் புள்ளிப் பட்டியலில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

(iv) Medal events were held across six sports and eighteen para national records were created.
இவ்விளையாட்டில் ஆறு பதக்கங்களுக்கானப் போட்டிகள் நடத்தப்பட்டு பதினெட்டு பாரா தேசிய சாதனைகள் படைக்கப்பட்டன.

(A) (i) only
(i) மட்டும்

(B) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டும்

(C) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(D) (ii), (iii) and (iv) only
(ii), (iii) மற்றும் (iv) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

113. Who described the All-India Congress as the body representing only a 'Microscopic Minority' of India's vast population in 1885?

1885 - ஆம் ஆண்டு அகில இந்திய காங்கிரஸை இந்தியாவின் பரந்த மக்கள் தொகையில் 'நுண்ணிய சிறுபான்மையினரை' பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பு என்று கூறியவர் யார்?

(A) Lord Clive
கிளைவ் பிரபு

(B) Lord Curzon
கர்சன் பிரபு

(C) Lord Dufferin
டஃபரின் பிரபு

(D) Lord Lansdowne
லான்ஸ்டவுன் பிரபு

(E) Answer not known
விடை தெரியவில்லை

114. Choose the right titles with their corresponding names :
அடைமொழிகளை அவர்களின் பெயர்களோடு சரியாக பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Grand Oldman of India<br>இந்தியாவின் முதுபெரும் மனிதர் | 1. | G.K. Gokhale<br>G.K. கோகலே |
| (b) | Servants of Indian society<br>இந்திய சமுதாயத்தின் ஊழியர்கள் | 2. | Annie Besant<br>அன்னிபெசன்ட் |
| (c) | Father of Indian unrest<br>இந்திய அமைதியின்மையின் தந்தை | 3. | Dadabhai Naoroji<br>தாதாபாய் நௌரோஜி |
| (d) | Home rule movement<br>தன்னாட்சி இயக்கம் | 4. | Bal Gangadhar Tilak<br>பால கங்காதர திலகர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 4 | 3 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

115. Identify the congress moderate leaders of Madras from the following
பின்வருவனவற்றில் மெட்ராஸ் மாகாண காங்கிரஸ் மிதவாதி தலைவர்களை அடையாளம் காண்க.

(i) V.S. Srinivasan
வி.எஸ். சீனிவாசன்

(ii) V. Krishnasamy
வி. கிருஷ்ணசாமி

(iii) S. Kasthurirangan
எஸ். கஸ்தூரிரங்கன்

(iv) G.A. Nadesan
ஜி.ஏ. நடேசன்

(A) (i) only
(i) மட்டும்

(B) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(C) (i), (ii) and (iv) only
(i), (ii) மற்றும் (iv) மட்டும்

(D) (i), (iii) and (iv) only
(i), (iii) மற்றும் (iv) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

116. According to Dr. Guha's view, which race is described in the below statements?
முனைவர் குகாவின் கருத்தின்படி, பின்வரும் கூற்றுகள் எந்த இனத்தைப் பற்றி விவரிக்கிறது?

(i) They came from East Mediterranean area.
அவர்கள் கிழக்கு மத்திய தரைக்கடல் பகுதியிலிருந்து வந்தனர்.

(ii) They survive in the aboriginal tribes of India.
அவர்கள் இந்திய பழங்குடியின மக்களோடு வாழ்கிறார்கள்.

(A) Aryan
ஆரியன்

(B) Proto Australoids
புரோட்டோ ஆஸ்ட்ரலாய்டுகள்

(C) Mongoloids
மங்கோலாய்டுகள்

(D) Negritos
நீக்ரிட்டோக்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

117. Assertion [A] : India had maritime trade with the Roman Empire during the early centuries of the Christian Era.

கூற்று [A] : கிறித்தவ சகாப்தத்தின் தொடக்க காலத்தில் ரோமானியப் பேரரசுடனான கடல்சார் வர்த்தகத்தில் இந்தியா முன்னிலையில் இருந்தது.

Reason [R] : A large number of Roman coins have been found from the excavations at Arikamedu.

காரணம் [R] : அரிக்கமேடு அகழ்வாராய்ச்சியில் ஏராளமான ரோமானிய நாணயங்கள் கிடைத்துள்ளன.

(A) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]

[A] மற்றும் [R] ஆகிய இரண்டும் சரி மற்றும் [R] என்பது [A] விற்குச் சரியான விளக்கமாகும்.

(B) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A]

[A] மற்றும் [R] ஆகிய இரண்டும் சரி ஆனால் [R] என்பது [A] விற்குச் சரியான விளக்கமல்ல

(C) [A] is true, but [R] is false

[A] சரி ஆனால் [R] தவறு

(D) [A] is false, but [R] is true

[A] தவறு ஆனால் [R] சரி

(E) Answer not known

விடை தெரியவில்லை

118. Which of the statement (s) is/are correct?

கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றில் எவை சரியானவை?

(i) It derived its elements from the architectural styles of the Delhi sultanate and that of distant Persia.

இது டில்லி சுல்தானியர்கள் மற்றும் தொலைதூர பெர்சியாவின் கட்டிடக்கலை பாணிகளிலிருந்து அதன் கூறுகளைப் பெற்றது.

(ii) The forts built by the Bahmani's were undoubtedly the greatest monuments far exceeding any of the same period in Europe.

பாமினியர்களால் கட்டப்பட்ட கோட்டைகள், ஐரோப்பாவில் அதே கால கட்டத்தில் கட்டப்பட்ட எந்தவொரு கோட்டையையும் விட மிகப்பெரிய நினைவுச் சின்னங்களாக சந்தேகத்திற்கு இடமின்றி இருந்தன.

(iii) Bahmani architecture did reflect harmonious blend of both Hindu and Islamic styles.

பாமினி கட்டிடக்கலை இந்து மற்றும் இஸ்லாமிய பாணிகளின் இணக்கமான கலவையை பிரதிபலித்தது.

(A) (i), (ii) and (iii) only
(i), (ii) மற்றும் (iii) மட்டும்

(B) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(C) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டும்

(D) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

119. Match List I with List II correctly and select your answer using the codes given below :

பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| List I<br>பட்டியல் I | | List II<br>பட்டியல் II |
|---|---|---|
| (a) First battle of Panipat<br>முதல் பானிபட் போர் | 1. | Babur and Rana Sanga<br>பாபர் மற்றும் ராணா சங்கா |
| (b) Battle of Khanua<br>கானுவாப் போர் | 2. | Babur and Medini Rai<br>பாபர் மற்றும் மேதினி ராய் |
| (c) Battle of Chanderi<br>சந்தேரிப் போர் | 3. | Babur and Mahmud Lodi<br>பாபர் மற்றும் மஹ்மூத் லோடி |
| (d) Battle of Ghagra<br>காக்ராப் போர் | 4. | Babur and Ibrahim Lodi<br>பாபர் மற்றும் இப்ராஹிம் லோடி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 | 4 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

120. Who is called as "Napolean of India"?
"இந்தியாவின் நெப்போலியன்" என்று அழைக்கப்பட்டவர் யார்?

(A) Sri Gupta
ஸ்ரீ குப்தா

(B) Samudragupta
சமுத்திர குப்தர்

(C) Chandragupta I
முதலாம் சந்திரகுப்தர்

(D) Ramgupta
இராம்குப்தா

(E) Answer not known
விடை தெரியவில்லை

121. Which among the following were the two pillars of Brahmo Samaj?
பின்வருவனவற்றுள் பிரம்ம சமாஜத்தின் இரண்டு தூண்களாக எது அமைந்துள்ளது?

(A) Reason and Vedas
பகுத்தறிவு மற்றும் வேதம்

(B) Vedas and Puranas
வேதங்கள் மற்றும் புராணங்கள்

(C) Vedas and Epics
வேதங்கள் மற்றும் இதிகாசங்கள்

(D) Vedas and Mantras
வேதங்கள் மற்றும் மந்திரங்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

122. Arrange the following constitutional amendments suitably :

கீழ்க்கண்ட விளக்கங்கள் எந்த அரசியல் அமைப்பு திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்டது என பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Control over property rights<br>சொத்துரிமை மீதான கட்டுப்பாடுகள் | 1. | 13th Amendment Act<br>13வது சட்டத்திருத்தம் |
| (b) | Creation of Nagaland state<br>நாகாலாந்து மாநில உருவாக்கம் | 2. | 11th Amendment Act<br>11வது சட்டத்திருத்தம் |
| (c) | Change in the election system of Vice-President<br>துணைக் குடியரசு தலைவர் தேர்தல் முறையில் மாற்றம் | 3. | 14th Amendment Act<br>14வது சட்டத்திருத்தம் |
| (d) | Declaration of Pondicherry as Union Territory<br>புதுச்சேரி, இந்திய யூனியன் பிரதேசமாக அறிவிப்பு | 4. | 4th Amendment Act<br>4வது சட்டத்திருத்தம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 3 | 2 | 1 | 4 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

123. The Doctrine of Judicial review was propounded by
நீதிப்புனராய்வு என்ற கருத்தினை முன்மொழிந்தவர்

(A) Arthur Schlesinger Jr.
ஆர்தர் செல்ஜிங்கர் ஜுனியர்

(B) John Marshall
ஜான் மார்ஷல்

(C) Sir Ivor Jennings
சர் ஐவர் ஜென்னிங்ஸ்

(D) None of the above
மேற்கண்ட யாருமில்லை

(E) Answer not known
விடை தெரியவில்லை

124. In India judicial review is carried out on the basis of
இந்தியாவில் நீதிப்புனராய்வு இதன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

(i) fundamental rights
அடிப்படை உரிமைகள்

(ii) basic structures of constitution
அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்புகள்

(iii) survey of opinion
கருத்துக் கணிப்புகள்

(iv) referendum
பொதுஜன வாக்கெடுப்பு

(A) (i) only
(i) மட்டும்

(B) (ii) only
(ii) மட்டும்

(C) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(D) (iii) and (iv) only
(iii) மற்றும் (iv) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

125. Which one of the following is not a feature of federalism?
பின்வருவனவற்றுள் எது கூட்டாட்சியின் அம்சம் அல்ல?

(A) Two or more levels of Government
இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரசாங்க நிலைகள்

(B) Different tiers of government govern the same citizen
ஒரே குடிமக்களுக்கு வெவ்வேறு அடுக்கு அரசாங்கம் வழங்கப்படுகிறது

(C) Court have the power to interpret the constitution
அரசியலமைப்பை விளக்கும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு உண்டு

(D) The Centre can order the State Government
மத்திய அரசு மாநில அரசிற்கு உத்திரவிடலாம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

126. Which among the following is a scheme related to street vendors?
பின்வருவனவற்றில் எது தெரு வியாபாரிகள் தொடர்பான திட்டம்?

(A) Svanidhi Scheme
ஸ்வாநிதி திட்டம்

(B) Sahayta Scheme
ஸஹாயதா திட்டம்

(C) Sahakar Scheme
ஸஹாகார் திட்டம்

(D) Shahi Litchi Scheme
ஷாஹி லிட்சி திட்டம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

127. Which of the following Committee recommended that “A post of District Development Commissioner should be created” to act as the CEO of Zila Parishad?

கீழ்வரும் எந்தக் குழு ‘மாவட்ட ஊராட்சி மன்றத்தில் ஒரு மாவட்ட மேம்பாட்டு ஆணையர் அதன் தலைமைச் செயல் அலுவலராக நியமிக்கப்பட வேண்டும்’ என்று பரிந்துரைத்தது?

(A) Balwant Rai Mehta Committee
பல்வந்த்ராய் மேத்தா குழு

(B) Ashok Mehta Committee
அசோக் மேத்தா குழு

(C) GVK Rao’s Committee
ஜி.வி.கே. ராவ் குழு

(D) L.M. Singhvi Committee
எல்.எம். சிங்வி குழு

(E) Answer not known
விடை தெரியவில்லை

128. In which state the Pradhan Mantri Ujjwala Yojana (PMUY) was formally launched?

பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா (PMUY) எந்த மாநிலத்தில் முறையாக தொடங்கப்பட்டது?

(A) Bihar
பீகார்

(B) Uttar Pradesh
உத்தரப்பிரதேசம்

(C) Maharashtra
மகாராஷ்டிரா

(D) Gujarat
குஜராத்

(E) Answer not known
விடை தெரியவில்லை

129. What is the maximum interval between two session of the Parliament?
நாடாளுமன்றத்தின் இரண்டு கூட்டத் தொடர்களுக்கு இடையேயான அதிகபட்ச கால அளவு __________ இருக்கலாம்.

(A) 3 months
3 மாதங்கள்

(B) 4 months
4 மாதங்கள்

(C) 6 months
6 மாதங்கள்

(D) 9 months
9 மாதங்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

130. Find out the correct statements on The Greater Chennai Corporation.
பெருநகர சென்னை மாநகராட்சி பற்றிய சரியான கூற்றினைக் கண்டறிக.

(i) The executive wing is headed by the Honorable Mayor.
மாண்புமிகு மேயர் தலைமையில் நிர்வாகப்பிரிவு உள்ளது.

(ii) The Chennai Corporation is divided into 15 zones comprising 200 wards.
சென்னை மாநகராட்சி 15 மண்டலங்களாகவும், 200 பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

(iii) These zones are grouped into 3 regional offices.
இந்த மண்டலங்கள் 3 வட்டார அலுவலகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

(A) (i) only
(i) மட்டும்

(B) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டும்

(C) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(D) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

131. Which Constitutional Article deals with Parliament's power to create All India services?
அகில இந்திய குடிமைப் பணிகளை உருவாக்குவதற்கான பாராளுமன்றத்தின் அதிகாரம் பற்றி விவாதிக்கும் அரசமைப்பு பிரிவு எது ?

(A) Article 310
பிரிவு 310

(B) Article 315
பிரிவு 315

(C) Article 322
பிரிவு 322

(D) Article 312
பிரிவு 312

(E) Answer not known
விடை தெரியவில்லை

132. The procedure of election of the Vice-President of India was amended by __________
இந்திய குடியரசுத் துணைத் தலைவரின் தேர்தல் நடைமுறையினை மாற்றியமைத்த அரசமைப்பு சட்டத் திருத்தமானது

(A) 1st Amendment Act
முதலாவது அரசமைப்பு சட்டத்திருத்தம்

(B) 7th Amendment Act
ஏழாவது அரசமைப்பு சட்டத்திருத்தம்

(C) 9th Amendment Act
ஒன்பதாவது அரசமைப்பு சட்டத்திருத்தம்

(D) 11th Amendment Act
பதினோராவது அரசமைப்பு சட்டத்திருத்தம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

133. The following Constitutional amendments envisage the equality of opportunity for all citizens relating to employment or appointment to any office of the state.
பொது வேலையில் எந்தவொரு பதவிக்கும் வேலைவாய்ப்பு அல்லது நியமனம் தொடர்பாக அனைத்து குடிமக்களுக்கும் சமவாய்ப்பு என்பது பின்வரும் அரசியலமைப்பு சட்ட திருத்தங்களின் வாயிலாக வலியுறுத்தப்படுகிறது.

(1) 17th Constitutional Amendment Act 1964
17வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், 1964

(2) 77th Constitutional Amendment Act 1995
77வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், 1995

(3) 85th Constitutional Amendment Act 2001
85வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், 2001

(4) 1st Constitutional Amendment Act 1951
1வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், 1951

(A) (1) and (3) only
(1) மற்றும் (3) மட்டும்

(B) (2) and (4) only
(2) மற்றும் (4) மட்டும்

(C) (2) and (3) only
(2) மற்றும் (3) மட்டும்

(D) (1) only
(1) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

134. The category of overseas citizen of India was incorporated in the Citizenship (Amendment) Act of India in the year __________
குடியுரிமைச் சட்டத்தில் __________ ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் மூலம் 'வெளிநாடு வாழ் இந்திய குடிமகன்' என்னும் புதிய பிரிவு இணைத்துக் கொள்ளப்பட்டது.

(A) 1996

(B) 2005

(C) 1992

(D) 1986

(E) Answer not known
விடை தெரியவில்லை

135. Arrange the following acts in chronological order of their year of enactment.

கீழ்கண்ட சட்டங்களை அவை இயற்றப்பட்ட ஆண்டின் அடிப்படையில் காலவரிசைப்படி வரிசைப்படுத்தவும்.

(1) Maternity Benefit Act
மகப்பேறு நிதியுதவிச் சட்டம்

(2) Mahatma Gandhi National Rural Employment Guarantee Act
மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உத்திரவாதச் சட்டம்.

(3) Right to Education Act
கல்வியுரிமைச் சட்டம்

(4) The Legal Services Authority Act
சட்டப் பணிகள் ஆணைக்குழு சட்டம்.

(A) (2), (3), (1), (4)
(B) (1), (4), (2), (3)
(C) (4), (3), (2), (1)
(D) (3), (1), (4), (2)
(E) Answer not known
விடை தெரியவில்லை

136. Which one of the following Act said about "Federal Structure"?
கீழ்கண்டவற்றில் "கூட்டாட்சி முறை" பற்றிக் கூறிய சட்டம் எது?

(A) Government of India Act, 1919
இந்திய அரசாங்கச் சட்டம், 1919

(B) Government of India Act, 1935
இந்திய அரசாங்கச் சட்டம், 1935

(C) Indian Councils Act, 1893
இந்திய கவுன்சில் சட்டம், 1893

(D) Indian Constitution – Article 248
இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் – விதி 248

(E) Answer not known
விடை தெரியவில்லை

137. Which scheme has been implemented to achieve the educational goals outlined in “Tamil Nadu Vision 2023” by opening,

“தமிழ்நாடு தொலைநோக்கு 2023” இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள கல்வி சார்ந்த இலக்குகளை அடைவதற்கு செயல்படுத்தப்பட்ட திட்டம் எது?

(A) libraries in villages
கிராமங்களில் நூலகங்களைத் திறத்தல்

(B) libraries in urban and villages of rural areas
நகர்ப்புற (ம) கிராமபுறங்களில் நூலகங்களைத் திறத்தல்

(C) libraries in tribal and urban areas
பழங்குடியினர் (ம) நகர்புறங்களில் நூலகங்களைத் திறத்தல்

(D) part time libraries in all the areas
அனைத்து பகுதிகளிலும் பகுதி நேர நூலகங்களைத் திறத்தல்

(E) Answer not known
விடை தெரியவில்லை

138. Which among the following statements are correct about the NEEDS scheme in Tamil Nadu?

தமிழ்நாட்டில் NEEDS திட்டம் குறித்து பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை ?

(i) It is an incentive providing scheme
இது ஊக்கத்தொகை வழங்கும் திட்டம்

(ii) Aspirants in the special category can be upto 55 years of age
சிறப்பு பிரிவில் உள்ள ஆர்வலர்கள் 55 வயது வரை இருக்கலாம்.

(iii) It offers 2% interest subvention throughout the repayment period
திருப்பிச் செலுத்தும் காலம் முழுவதும் 2% வட்டி மானியத்தை வழங்குகிறது.

(iv) The scheme is devised specially for first generation entrepreneurs.
முதல் தலைமுறை தொழில்முனைவோருக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட திட்டம் இது.

(A) (iii) and (iv) only
(iii) மற்றும் (iv) மட்டும்

(B) (ii) and (iv) only
(ii) மற்றும் (iv) மட்டும்

(C) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(D) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

139. Assertion [A] : "The Vision 2023" Tamilnadu document envisage Tamilnadu to be the most prosperous and progressive state with no poverty by the year 2023.

கூற்று [A] : 2023ஆம் ஆண்டுக்குள் வறுமை இல்லாத மிகவும் வளமான மற்றும் முற்போக்கான மாநிலமாக தமிழகம் இருக்கும் என்று "தொலைநோக்கு 2023" தமிழ்நாடு ஆவணம் கணித்துள்ளது.

Reason [R] : Manufacturing sector is assigned the key role of energizing the economy and erecting virtuous circle of enhanced competitiveness, efficiency and vibrancy in all sections.

காரணம் [R] : உற்பத்தித்துறை பொருளாதாரத்தை உற்சாகப்படுத்துவதிலும், அனைத்துப் பிரிவுகளிலும் மேம்பட்ட போட்டித்திறன், செயல்திறன் மற்றும் அதிர்வு ஆகியவற்றின் நல்லொழுக்க வட்டத்தை உருவாக்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

(A) [A] is true and [R] is false

கூற்று [A] சரி, காரணம் [R] தவறு

(B) Both [A] and [R] are false

கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் தவறு

(C) [A] is false and [R] is true

கூற்று [A] தவறு, காரணம் [R] சரி

(D) Both [A] and [R] are true

கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி

(E) Answer not known

விடை தெரியவில்லை

140. According to the SDG India Index 2023-24, which category the Tamilnadu state belongs to ?

நிலையான வளர்ச்சி இலக்கு (SDG) இந்திய குறியீடு 2023-24ன் படி தமிழ்நாடு எந்த வகைப்பாட்டில் பொருந்துகிறது ?

(A) aspirant
பின்தங்கிய செயல்திறன் நிலை

(B) performer
செயலாற்றும் நிலை

(C) front runner
முன்னணி செயல்திறன் நிலை

(D) achiever
சாதனையாளர்

(E) Answer not known
விடை தெரியவில்லை

141. Which among the following is the first state in the country to establish a Trans-Gender Welfare Board (TGWB)?

பின்வரும் மாநிலங்களில் 'திருநங்கைகள் நல வாரியம்' ஒன்றை நிறுவிய முதல் மாநிலம் எது ?

(A) Maharastra
மகாராஷ்டிரா

(B) Orissa
ஒரிசா

(C) Tamilnadu
தமிழ்நாடு

(D) Kerala
கேரளா

(E) Answer not known
விடை தெரியவில்லை

142. Assertion [A] : The disparity in education between urban and rural areas has enduring and profound effects that exacerbate social inequality.

கூற்று [A] : நகர்ப்புற-கிராமப்புற கல்வியில் உள்ள ஏற்றத்தாழ்வு, சமூக சமத்துவமின்மையை மோசமாக்குவதில் நீண்ட கால மற்றும் ஆழமான தாக்கங்களை ஏற்படுத்துகிறது.

Reason [R] : Rural students face significant challenges in competing with their urban peers due to lack of adequate educational resources.

காரணம் [R] : போதுமான கல்வி வளங்கள் இல்லாததால் கிராமப்புற மாணவர்கள் தங்கள் நகர்புற சகாக்களுடன் போட்டியிடுவதில் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்கின்றனர்.

(A) [A] is true but [R] is false

[A] என்பது சரி ஆனால் [R] என்பது தவறு

(B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]

[A] மற்றும் [R] இரண்டும் சரி மற்றும் [R] என்பது [A]வின் சரியான விளக்கம்

(C) [A] is false, [R] is true

[A] என்பது தவறு, [R] என்பது சரி

(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] is correct.

[A] மற்றும் [R] இரண்டும் சரி ஆனால் [R] என்பது [A]இன் சரியான விளக்கம் அல்ல என்பது சரி

(E) Answer not known

விடை தெரியவில்லை

143. Which among the following is true about Tamilnadu's achievement of SDGs according to the SDG India Index 2023-24?

2023-2024 ஆம் ஆண்டுக்கான SDG இந்திய குறியீட்டின்படி, SDGக்களில் தமிழ் நாட்டின் சாதனைகள் குறித்து பின்வருபவனவற்றில் எந்த கூற்று சரியானது?

(i) Tamilnadu was the top performer among the states in the "No Poverty" category as a front runner.
தமிழ்நாடு வறுமை இல்லாத மாநிலங்கள் பிரிவில் முன்னணி மாநிலமாக செயல்பட்டது.

(ii) The overall SDG score of the state was 76.
மாநிலத்தில் ஒட்டுமொத்த SDG மதிப்பெண் 76.

(iii) Tamilnadu ranks third in the country in the composite SDG score.
கூட்டு SDG மதிப்பெண்ணில் தமிழ்நாடு நாட்டிலேயே மூன்றாவது இடத்தில் உள்ளது.

(iv) The state is a performer in affordable and clean energy.
மலிவான மற்றும் தூய்மையான ஆற்றலின் செயல்திறன் மிகுந்த மாநிலமாக உள்ளது.

(A) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டும்

(B) (ii) and (iv) only
(ii) மற்றும் (iv) மட்டும்

(C) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(D) (iii) and (iv) only
(iii) மற்றும் (iv) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

144. __________ is often recognized as the “Father of General Knowledge", for her contribution in promoting education, awareness and intellectual growth among people.

மக்களிடையே கல்வி, விழிப்புணர்வு மற்றும் அறிவுசார் வளர்ச்சியை ஊக்குவித்ததற்காக __________ ன் பங்களிப்பை கருத்தில் கொண்டு பொதுவாக ‘பொது அறிவின் தந்தை’ என அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

(A) Kanaklata Barua
கனக்லதா பருவா

(B) Bir Tikendrajit Singh
பிர் திகேந்திரஜித் சிங்

(C) Bhikaiji Cama
பிகைஜி காமா

(D) Haipou Jadonang
ஹைபோ ஜடோனாங்

(E) Answer not known
விடை தெரியவில்லை

145. Match the following :
பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Kothari Commission<br>கோத்தாரி கமிஷன் | 1. | The destiny of India shaped in her classrooms<br>இந்தியாவின் எதிர்காலம் அதன் வகுப்பு அறைகளில் தீர்மானிக்கப்படுகிறது |
| (b) | Radhakrishnan Report<br>இராதாகிருஷ்ணன் அறிக்கை | 2. | Higher Education is a private good<br>உயர்கல்வி என்பது தனியார் சொத்து |
| (c) | Ambani – Birla Committee<br>அம்பானி-பிர்லா கமிட்டி | 3. | Social Justice is the foundation of states<br>சமூக நீதியே அரசின் அடிப்படையாக விளங்குகிறது |
| (d) | Yashpal Committee<br>யஸ்பால் கமிட்டி | 4. | Learning without burden<br>சுமையின்றி பயிலுதல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 3 | 2 | 1 | 4 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

146. Assertion [A] : Policy makers must continue to focus on two fold strategy of letting the economy grow fast and attacking poverty through poverty alleviation programmes.

கூற்று [A] : கொள்கை வகுப்பவர்கள் பொருளாதார வளர்ச்சி, மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் ஆகிய இருமுனை உத்திகள் மூலமாக வறுமை ஒழிப்பை முன்னெடுக்க வேண்டும்.

Reason [R] : High growth may be necessary, but is not sufficient for poverty alleviation.

காரணம் [R] : வேகமான பொருளாதார வளர்ச்சி அவசியமானதாக இருக்கலாம். ஆனால், அது மட்டும் வறுமையை ஒழிக்க போதுமானதல்ல.

(A) [A] is true [R] is false

[A] சரி [R] தவறு

(B) [R] is true [A] is false

[R] சரி [A] தவறு

(C) Both [A] and [R] are true, but [R] is not correct explanation of [A]

[A]வும் [R]வும் சரி ஆனால் [R] என்பது [A]வுக்கு சரியான விளக்கமாகாது

(D) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]

[A]வும் [R]வும் சரி; [R] என்பது [A]வுக்கு சரியான விளக்கமாகும்

(E) Answer not known

விடை தெரியவில்லை

147. During 2014 – 2015 production of sugar in India is __________
2014 – 2015 ஆம் ஆண்டில் இந்தியாவின் சர்க்கரை உற்பத்தி

(A) 11.8 million tonnes
11.8 மில்லியன் டன்ஸ்

(B) 26.3 million tonnes
26.3 மில்லியன் டன்ஸ்

(C) 25.2 million tonnes
25.2 மில்லியன் டன்ஸ்

(D) 27.9 million tonnes
27.9 மில்லியன் டன்ஸ்

(E) Answer not known
விடை தெரியவில்லை

148. Identify the correct statement :
சரியான கூற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

(a) Environmental goods are typically non-market goods.
சுற்றுச்சூழல் பொருட்கள் என்பவை சந்தையிடாப் பொருட்கள் ஆகும்.

(b) Environmental goods are typically marketable goods.
சுற்றுச்சூழல் பொருட்கள் என்பவை சந்தையிடப்படக்கூடிய பொருட்கள்.

(c) Externalities arise due to interdependence between economic units.
புறவிளைவுகள் உற்பத்தி மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை சார்ந்தது.

(A) (a) and (b) are correct
(a) மற்றும் (b) சரி

(B) (a) and (c) are correct
(a) மற்றும் (c) சரி

(C) (b) and (c) are correct
(b) மற்றும் (c) சரி

(D) all are incorrect
அனைத்தும் தவறு

(E) Answer not known
விடை தெரியவில்லை

149. According to Dalton's classifications of public revenue, compulsory payments include
டால்டனின் பொது வருவாய் வரிகளின் வகைப்பாட்டின்படி கட்டாயக் கட்டணம் உள்ளடக்கியவை

(A) Taxes in ordinary sense, tributes and indemnities, compulsory loans and pecuniary penalties
நடைமுறை வரிகள், காணிக்கைகள், இழப்பீடுகள், கட்டாயக் கடன்கள், பண அபராதங்கள்

(B) Taxes in ordinary sense and compulsory loans only
நடைமுறை வரிகள், கட்டாயக் கடன்கள் ஆகியவை மட்டும்

(C) Tributes and indemnities and compulsory loans only
காணிக்கைகள், இழப்பீடுகள், கட்டாயக் கடன்கள் ஆகியவை மட்டும்

(D) Compulsory loans and pecuniary penalties only
கட்டாயக் கடன்கள், பண அபராதங்கள் ஆகியவை மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

150. Which of the following parameters measured are true for Child Development Index?
குழந்தை வளர்ச்சி குறியீட்டிற்கு அளவிடப்பட்ட பின்வரும் அளவுருக்களில் எது உண்மை?

(1) Percentage of malnourished children (0-6) years
ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளின் சதவீதம் (0–6 வயது)

(2) Juvenile male ratio
சிறார் ஆண் விகிதம்

(3) Net enrolment ratio in primary and secondary
தொடக்க மற்றும் இடைநிலைப் பள்ளிகளில் நிகர சேர்க்கை விகிதம்

(4) Transition rate from primary to upper primary
தொடக்கப் பள்ளியிலிருந்து மேல்நிலைப் பள்ளிக்கு மாறுதல் விகிதம்

(A) (1) and (2)
(1) மற்றும் (2)

(B) (1) and (3)
(1) மற்றும் (3)

(C) (1) and (4)
(1) மற்றும் (4)

(D) (2) and (4)
(2) மற்றும் (4)

(E) Answer not known
விடை தெரியவில்லை

151. e-NAM is
இ-நாம் என்பது

(A) Award for best farmer of each state
ஒவ்வொரு மாநிலத்தின் சிறந்த விவசாயிக்கான விருது

(B) Online market for non-farm commodities
பண்ணை சாராத பொருட்களுக்கான இணையச் சந்தை

(C) Online market for agricultural commodities
வேளாண் பொருட்களுக்கான இணையச் சந்தை

(D) Award for taking up water conservation
நீர் பாதுகாப்பை மேற்கொண்டதற்கான விருது

(E) Answer not known
விடை தெரியவில்லை

152. Match the budget deficits 2025-2026 with respective percentage to GDP :

2025-2026-ம் ஆண்டு நிதியறிக்கையின் பற்றாக்குறையை GDP ல் பிரதிபலிக்கும் சதவீதத்துடன் பொருத்தவும் :

| | | | |
|---|---|---|---|
| (a) | Fiscal deficit<br>நிதி பற்றாக்குறை | 1. | 0.3%<br>0.3% |
| (b) | Revenue deficit<br>வருவாய் பற்றாக்குறை | 2. | 4.4%<br>4.4% |
| (c) | Effective revenue deficit<br>பயனுள்ள வருவாய் பற்றாக்குறை | 3. | 0.8%<br>0.8% |
| (d) | Primary deficit<br>முதன்மை பற்றாக்குறை | 4. | 1.5%<br>1.5% |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 4 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

153. Match the following :

பின்வருவனவற்றை பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Ayushman Bharat Yojana<br>ஆயுஷ்மான் பாரத் யோஜ்னா | 1. | 50 million LPG connections to women of BPL families<br>வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள பெண்களுக்கு 50 மில்லியன் LPG எரிவாயு இணைப்புகள் |
| (b) | Pradhan Mantri Ujwala Yojana<br>பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா | 2. | Free access to health insurance coverage<br>சுகாதார காப்பீட்டுக்கான இலவச அணுகல் |
| (c) | Stand up India<br>ஸ்டாண்ட் அப் இந்தியா | 3. | Expand affordable access to financial services<br>நிதி சேவைகளுக்கான மலிவு அணுகலை விரிவாக்குதல் |
| (d) | Pradhan Mantri Jan Dhan Yojana<br>பிரதான் மந்திரி ஜன்தன் யோஜனா | 4. | Supports entrepreneurship among women and SC & ST communities<br>பெண்கள் மற்றும் SC & ST சமூகங்கள் மத்தியில் தொழில்முனைவை ஆதரிக்கிறது |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 2 | 1 | 3 | 4 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

154. Chairman of the Planning Commission in India is
இந்தியத் திட்டக் குழுவின் தலைவர்

(A) Prime Minister
பிரதமர்

(B) President
குடியரத்தலைவர்

(C) RBI Governor
இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர்

(D) Vice President
துணைக் குடியரசுத் தலைவர்

(E) Answer not known
விடை தெரியவில்லை

155. Which of the following statements are true about commission on centre-state relations, 1988?
மத்திய மாநில உறவுகள் ஆணையம், 1988 பற்றிய உண்மை அறிக்கைகள், பின்வருவனவற்றுள் எவை ?

(i) The commission favoured major modifications in the basic scheme of constitution dividing the fields of taxation
ஆணையம் வரி விதிப்புத் துறைகளைப் பிரிக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படைத் திட்டத்தின் முக்கிய மாற்றங்களை ஆதரிக்கின்றன

(ii) Accepted to shift taxation powers of centre to states
மத்திய அரசின் வரி விதிப்பு அதிகாரங்களை மாநிலங்களுக்கு மாற்றுவதற்கு ஒப்புதல்

(iii) Recommended setting up of an expert committee to examine taxation reforms and resource mobilisation.
வரி சீர்திருத்தங்கள் மற்றும் வளங்களைத் திரட்டுவது குறித்து ஆய்வு செய்ய நிபுணர் குழு அமைக்க பரிந்துரை

(A) (i) only
(i) மட்டும்

(B) (i) and (ii)
(i) மற்றும் (ii)

(C) (iii) only
(iii) மட்டும்

(D) (ii) and (iii)
(ii) மற்றும் (iii)

(E) Answer not known
விடை தெரியவில்லை

156. "Decision to migrate and the process of migration is determined by area of origin, destination, intervening obstacles and personal factors" – who propounded this theory?
"புலம் பெயர வேண்டும் என்ற முடிவும், புலம் பெயரும் செயல்முறையும், ஒருவர் பிறந்த இடம், செல்ல வேண்டிய நாடு, குறுக்கிடும் தடைகள், தனிமனித காரணங்கள் ஆகியவற்றால் தீர்மானிக்கப்படுகின்றன" – இந்தக் கோட்பாட்டைக் கூறியவர் யார்?

(A) Malthus
மால்தஸ்

(B) Dalton
டால்டன்

(C) Everett Lee
எவெரெட் லீ

(D) Kingsley Davis
கிங்ஸ்லி டேவிஸ்

(E) Answer not known
விடை தெரியவில்லை

157. Which of the following statement relating to Rajaji is not correct?
ராஜாஜி பற்றிய கீழ்க்கண்ட கூற்றுக்களில் தவறானவற்றை எடுத்து எழுதுக.

(A) He served as Governor General of India from 1948 to 1950
1948 லிருந்து 1950 வரை இந்திய கவர்னர் ஜெனரலாக பணியாற்றினார்

(B) In 1950, he started the 'Sudantra Party' against the Congress Party
1950–ல் காங்கிரசு கட்சிக்கு எதிராக சுதந்திராக் கட்சியைத் துவக்கினார்

(C) He introduced Hindi as a compulsory subject in schools
இந்தி மொழியை கட்டாயப் பாடமாக பள்ளிகளில் அறிமுகப்படுத்தினார்

(D) He served as the first premier of Madras Presidency
சென்னை மாகாணத்தின் முதல் மந்திரியாகப் பணியாற்றினார்

(E) Answer not known
விடை தெரியவில்லை

158. The first woman who was arrested and put in prison during the Salt Satyagraha Movement in India organised by Mahatma Gandhi
மகாத்மா காந்தி தொடங்கிய உப்பு சத்தியாகிரகத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட முதல் இந்தியப் பெண்மணி

(A) Anjalai Ammal
அஞ்சலை அம்மாள்

(B) Sarojini Naidu
சரோஜினி நாயுடு

(C) Janaki
ஜானகி

(D) Rukmini Lakshmipathi
ருக்மணி லக்ஷ்மிபதி

(E) Answer not known
விடை தெரியவில்லை

159. Which of the following statements are true about Virapandya Kattabomman?
எந்த கூற்று வீரபாண்டிய கட்டபொம்மனை பற்றிய சரியானது?

(i) By 31st May, 1798 the total arrears of tribute from Panjalamkurichi amounted to 3510 pagodas

1798, மே 31-ம் தேதிக்குள் பஞ்சாலங்குறிச்சியிலிருந்து செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத் தொகை 3510 பகோடாக்களாக இருந்தது

(ii) S.R. Lushington was appointed in the place of Jackson
எஸ்.ஆர். லஷிங்டன் ஜாக்சனுக்குப் பதிலாக நியமிக்கப்பட்டார்

(iii) In 1798, Son of the Poligar of Sivagiri and his consultation adviser Mappilai Vannian visited Panjalamkurichi and held discussion

1798-ல் சிவகிரி பாளையக்காரர் மகனும் மற்றும் அவருடைய ஆலோசகர் மாப்பிள்ளை வண்ணியனும் பாஞ்சாலங்குறிச்சிக்குச் சென்று ஆலோசனை நடத்தினர்

(iv) Vijaya Ragunatha Amar, Poligar of Sattur Captured Kattabomman from the jungles of Kalapore and handed over to the enemy

சாத்தூர் பாளையகாரர் விஜய ரகுநாத அமர், கட்டபொம்மனை கலப்பூரா காட்டுபகுதியில் இருந்து பிடித்து எதிராளிகளிடம் ஒப்படைத்தார்

(A) (i) and (iv) correct
(i) மற்றும் (iv) சரி

(B) (i) and (ii) correct
(i) மற்றும் (ii) சரி

(C) (ii) and (iii) correct
(ii) மற்றும் (iii) சரி

(D) (ii) and (iv) correct
(ii) மற்றும் (iv) சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

160. Which of the following statements are true about V.O. Chidambaram?

வ.உ. சிதம்பரம் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது உண்மை?

(i) V.O. Chidambaram started the Swadeshi Steam Navigation by selling his land in Ottapidaram near Tuticorin

வ.உ. சிதம்பரம் தூத்துக்குடி அருகே ஒட்டப்பிடாரத்தில் தனது நிலத்தை விற்று சுதேசி நீராவி கப்பலை தொடங்கினார்

(ii) He bought a new ship from Japan which operated from Tuticorin

தூத்துகுடியில் இருந்து இயக்கப்படும் புதிய கப்பலை ஜப்பானில் இருந்து வாங்கினார்

(iii) The common people of India who had to travel to and from Colombo patronised this ship

கொழும்பிலிருந்து பயணிக்க வேண்டியிருந்த இந்தியாவின் பொது மக்கள் அவரது கப்பலை ஆதரித்தனர்

(A) (ii) only
(ii) மட்டும்

(B) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(C) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டும்

(D) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

161. Which of the following are Dravidian Magazines?
பின்வருவனவற்றுள் திராவிட இதழ்கள் எவை? கண்டறிக.

(i) Dravida nadu
திராவிட நாடு

(ii) Nam Nadu
நம் நாடு

(iii) Kudiyarasu
குடியரசு

(iv) Murasoli
முரசொலி

(A) (i), (ii) are right
(i), (ii) மட்டும் சரி

(B) (i), (iii), (iv) are right
(i), (iii), (iv) மட்டும் சரி

(C) (iii), (iv) are right
(iii), (iv) மட்டும் சரி

(D) All are right
அனைத்தும் சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

162. Among the following place, Varnashrama Sangam Conference was held at ___________ on 31 May 1930.
வர்ணாஷ்ரம் சங்க மாநாடு, மே 31, 1930 ஆம் ஆண்டு __________ என்ற இடத்தில் நடைபெற்றது.

(A) Chengalpattu
செங்கல்பட்டு

(B) Virudhunagar
விருதுநகர்

(C) Madurai
மதுரை

(D) Kumbakonam
கும்பகோணம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

163. Which of the following statement are true about Mohenjadaro?

மொஹஞ்சதாரோவைப் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது உண்மை?

(i) R.D. Banerjee started excavations at Mohenjadaro
ஆர்.டி. பானர்ஜி மொஹஞ்சதாரோவில் அகழ்வாராய்ச்சியைத் தொடங்கினார்.

(ii) Mohenjadaro situated in Montogmery district
மொஹஞ்சதாரோ மாண்ட்கோமெரி மாவட்டத்தில் அமைந்துள்ளது.

(iii) The third largest public building, The Great Bath is at Mohenjadaro
மூன்றாவது பெரிய பொதுக் கட்டிடம், பெரிய குளியல் அறை மொஹஞ்சதாரோவில் அமைந்துள்ளது.

(A) (ii) only
(ii) மட்டும்

(B) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டும்

(C) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(D) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

164. Read the following assertion and reason and select the correct answer from the code given below :
பின்வரும் கூற்று மற்றும் காரணத்தைப் படித்துக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டிலிருந்து சரியானப் பதிலைத் தேர்ந்தெடுக்கவும் :

Assertion [A] : The Tamils had the knowledge of iron as early as in the 4th millennium BCE.

கூற்று [A] : கி.மு. 4 ஆயிரம் ஆண்டுகளிலேயே தமிழர்கள் இரும்பை பற்றிய அறிவைப் பெற்றிருந்தனர்.

Reason [R] : Iron objects dating between 2427 and 3345 BCE were obtained in different places in Tamilnadu.

காரணம் [R] : கி.மு. 2427 முதல் கி.மு. 3345 வரையிலான கால கட்டத்தைச் சேர்ந்த இரும்பு பொருட்கள் தமிழ் நாட்டின் வெவ்வேறு இடங்களிலிருந்து கண்டெடுக்கப்பட்டன.

Code :
குறியீடு :

(A) [A] is true but [R] is false
[A] சரி ஆனால் [R] தவறு

(B) [A] is false but [R] is true
[A] தவறு ஆனால் [R] சரி

(C) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]
[A] மற்றும் [R] இரண்டும் சரி மற்றும் [R] என்பது [A]ன் சரியான விளக்கம்

(D) Both [A] and [R] are true but [R] is not the correct explanation of [A]
[A] மற்றும் [R] இரண்டும் சரி ஆனால் [R] என்பது [A] ன் சரியான விளக்கம் அல்ல

(E) Answer not known
விடை தெரியவில்லை

165. Match correctly the excavation sites with its importance.
அகழாய்வு தளத்தை அதன் முக்கியத்துவத்தோடு சரியாக பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | Anamalai<br>ஆனமலை | 1. | Mode of construction of the irrigation system<br>நீர்ப்பாசன அமைப்பின் கட்டுமான முறை |
| (b) | Tiruttangal<br>திருத்தங்கல் | 2. | Burial type & burial antiquities<br>புதைக்கப்பட்ட வகை மற்றும் புதைக்கப்பட்ட தொல்பொருட்கள் |
| (c) | Kannanur<br>கன்னனூர் | 3. | Existence of Megalithic culture at Maduari<br>மதுரையில் பெருங்கற்கால கலாச்சாரத்தின் இருப்பு |
| (d) | Kovalanpottal<br>கோவலன்பொட்டல் | 4. | Antiquities of Megalithic & Microlithic periods<br>பெருங்கற்கால மற்றும் நுண்கற்கால காலங்களின் தொல்பொருட்கள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

166. A war without sword or bloodshed is on the tidings
Join all those who have faith in the power of truth.

What is the message of the above lines?

கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை நம்பும்யாரும் சேருவீர்

– இதில் வலியுறுத்தப்படும் கருத்து

(A) Non violence
அகிம்சை

(B) Rebellion
போராட்டம்

(C) Agitation
ஆர்ப்பாட்டம்

(D) Faith
நம்பிக்கை

(E) Answer not known
விடை தெரியவில்லை

167. A middle ground is ___________
நடுவுநிலைமை என்பது ___________

(A) a sign of fairness
நியாயத்தின் அறிகுறி

(B) the first line of injustice
அநியாயத்தின் முதல்வரி

(C) mind blowing trend
மனம் போன போக்கு

(D) a statement by Melor
மேலோர் கூறும் கூற்று

(E) Answer not known
விடை தெரியவில்லை

168. Which of the following is considered 'truth' by Valluvam?
பின்வருவனவற்றுள் வாய்மை என வள்ளுவர் குறிப்பிடுவது.

(1) It is as it, it is bad
ஆவது போலக் கெடும்

(2) Speech that doesn't contain venom or evil
தீமை இலாத சொலல்

(3) Result of action
வினைபடு பாலால் கொளல்

(4) Speech carrying beneficial intention
நன்மை பயக்கும் எனின்

(A) (2) only
(2) மட்டும்

(B) (1) and (2) only
(1) மற்றும் (2) மட்டும்

(C) (2) and (4) only
(2) மற்றும் (4) மட்டும்

(D) (3) and (4) only
(3) மற்றும் (4) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

169. Select the correct answer :

சரியான விடையைத் தேர்ந்தெடு :

A land that prospers even without hard labour is a country; not the one demanding labour

Without hard labour

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல

நாட வளந்தரு நாடு – இக்குறளில் நாடா வளத்தன என்பதற்குச் சரியான பொருளைத் தேர்வு செய்க.

(1) Best country
சிறந்த நாடென்று சொல்லப்படுவன

(2) They need not ask for help from other countries and have all resources
பிற நாடுகளின் உதவியை வேண்டாது தமக்கு வேண்டிய பொருள் வளங்களையெல்லாம் தம்மகத்தே கொண்டனவாகும்

(3) They ask help for other countries
பிற நாட்டு உதவியை நாடுமாறு குன்றிய வளங்கொண்ட நாடுகள்

(4) No better country
சிறந்த நாடாகா

(A) (1) and (2) only
(1) மற்றும் (2) மட்டும்

(B) (2) only
(2) மட்டும்

(C) (1) and (3) only
(1) மற்றும் (3) மட்டும்

(D) (1) and (4) only
(1) மற்றும் (4) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

170. What is virtue?
அறம் இன்னதென்பது __________ ஆகும்.

(A) method shown by parents
பெற்றோர் காட்டிய வழிமுறை

(B) a definition set by the people themselves
மக்கள் தாமே அமைத்துக் கொண்ட வரையறை

(C) lifestyle made by lovers
காதலர்கள் ஏற்படுத்திய வாழ்க்கை முறை

(D) a system of friendship
நட்பாளர்கள் வழி அமைந்த நெறிமுறை

(E) Answer not known
விடை தெரியவில்லை

171. Choose the correctly matched ones :
சரியாகப் பொருந்துமாற்றைத் தேர்வு செய்க :

(1) Kaai Nel Aruththu Kavalam Kollinae (To harvest rice & consume in handfuls) – Kovoor Kizhaar
காய் நெல் லறுத்துக் கவளம் கொளினே — கோவூர்கிழார்

(2) Yathum Oore; Yaavarum Kelir (Every city is your city, everyone is your kin) – Kaniyan Poongundranaar
யாதும் ஊரே யாவரும் கேளிர் — கணியன் பூங்குன்றனார்

(3) Valliyorp Padarnthu Pullir Pogi (The people spread out & achieved their goals) – Pisiraanthaiyar
வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற்போகி — பிசிராந்தையார்

(4) Ee Yena iraththal Izhinthandru (It isn't dishonour to beg) – Kazhaithin Yaanaiyaar
ஈயென இரத்தல் இழிந்தன்று — கழைதின் யானையார்

(A) (1) and (3) are correct
(1) மற்றும் (3) சரியானவை

(B) (2) and (4) are correct
(2) மற்றும் (4) சரியானவை

(C) (1) and (4) are correct
(1) மற்றும் (4) சரியானவை

(D) (2) and (3) are correct
(2) மற்றும் (3) சரியானவை

(E) Answer not known
விடை தெரியவில்லை

172. Which of the following is incorrectly paired?
தவறான இணையைக் கண்டறிக.

(1) Kandhapuranam – It is an adaptation of the first part of the Sankara samhita
கந்தபுராணம் சங்கர சங்கிதையின் முதற்காண்டத் தழுவல்

(2) Yasodhara Kaviyam – It is an adaptation of the book Yasodhara Charitra written in the language of Sanskrit
யசோதர காவியம் வடமொழி யசோதர சரிதத்தின் தழுவல்

(3) Periyapuranam – It is an adaptation book of Uttara Mapurana written in the language of Sanskrit
பெரிய புராணம் வடமொழி உத்தர மாபுராணத்தின் தழுவல்

(4) Sripurana – It is an adaptation of the story of Naga Panchami
ஸ்ரீபுராணம் நாக பஞ்சமிக் கதையின் தழுவல்

(A) (1) and (2)
(1) மற்றும் (2)

(B) (2) and (3)
(2) மற்றும் (3)

(C) (3) and (4)
(3) மற்றும் (4)

(D) (1) and (4)
(1) மற்றும் (4)

(E) Answer not known
விடை தெரியவில்லை

173. In 2019 which Tamil novel get an Sahitya Academy award?
2019ஆம் ஆண்டில் சாகித்ய அகாடமி விருது பெற்ற தமிழ் நாவல்

(A) Anjāadi
அஞ்ஞாடி

(B) Kāavalkottam
காவல்கோட்டம்

(C) Sōole
சூல்

(D) Sapparam
சப்பரம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

174. Match the following :
பின்வருவனவற்றைப் பொருத்துக :

The excavated regions and their current districts.
பின்வரும் தமிழக அகழாய்வு இடங்களையும் அவை அமைந்துள்ள மாவட்டங்களையும் சரியாகப் பொருத்துக.

(a) Athichanalloor
ஆதிச்சநல்லூர்

1. Thuthukudi
தூத்துக்குடி

(b) Sivakalai
சிவகளை

2. Tirunelveli
திருநெல்வேலி

(c) Korkai
கொற்கை

3. Madurai
மதுரை

(d) Keezhadi
கீழடி

4. Thuthukudi
தூத்துக்குடி

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

175. Which of Akilan's novel has Netaji's freedom fighters at its crux?
நேதாஜியின் விடுதலைப் படையை மையமாக வைத்து எழுதப்பட்ட அகிலனின் புதினம் எது?

(A) Paalmara Kattinilae
பால்மரக் காட்டினிலே

(B) Paavai Vilakku
பாவை விளக்கு

(C) Nenjin Alaigal
நெஞ்சின் அலைகள்

(D) Chithira Paavai
சித்திரப்பாவை

(E) Answer not known
விடை தெரியவில்லை

176. A and B can do a piece of work in 24 days, while B and C can do it in 16 days whereas A and C can do it in 12 days. How many days will 'A' take to do the same work?
A மற்றும் B ஆகியோர் ஒரு வேலையை 24 நாட்களிலும், B மற்றும் C ஆகியோர் அதே வேலையை 16 நாட்களிலும், A மற்றும் C ஆகியோர் 12 நாட்களிலும் முடிப்பர். A என்பவர் தனியே அந்த வேலையை எத்தனை நாட்களில் முடிப்பர்?

(A) 24 days
24 நாட்கள்

(B) 36 days
36 நாட்கள்

(C) 30 days
30 நாட்கள்

(D) 32 days
32 நாட்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

177. If 81 students can do a painting on a wall of length 360 m in 48 days, then how many students can do the painting on a similar type of wall of length 120 m in 9 days?
81 மாணவர்கள் 360 மீ நீளமுள்ள ஒரு சுவரில் ஓர் ஓவியத்தை 48 நாட்களில் வண்ணமிடுவர் எனில், 120 மீ நீளமுள்ள அது போன்ற ஒரு சுவரில் 9 நாட்களில் அந்த ஓவியத்தை எத்தனை மாணவர்கள் வண்ணமிடுவர்?

(A) 60

(B) 96

(C) 90

(D) 144

(E) Answer not known
விடை தெரியவில்லை

178. A, B and C completed a work costing Rs. 1,920. A worked for 4 days, B for 6 days and C for 7 days. If their daily wages are in the ratio of 6 : 5 : 6, how much amount will be received by C?

A, B மற்றும் C ஆகியோர் ரூ. 1,920 மதிப்பிலான வேலையை முடித்தனர். 4 நாட்கள் A வும், 6 நாட்கள் B யும் மற்றும் 7 நாட்கள் C யும் வேலை செய்தனர். அவர்களின் தினசரி ஊதியம் 6 : 5 : 6 என்ற விகிதத்தில் இருந்தால், C எவ்வளவு தொகையைப் பெறுவார்?

(A) 360

(B) 480

(C) 720

(D) 840

(E) Answer not known
விடை தெரியவில்லை

179. If the height of the cone is thrice of its radius $r$ . Then volume of the cone is __________

ஒரு கூம்பின் உயரமானது அதன் ஆரம் $r$ ஐப்போல 3 மடங்கு எனில், கூம்பின் கன அளவானது ________

(A) $\pi r^2$

(B) $\pi r^3$

(C) $\pi r^2 h$

(D) $\frac{1}{3}\pi h^3$

(E) Answer not known
விடை தெரியவில்லை

180. A cube has the total surface area of 726 $cm^2$. Find it's Lateral Surface Area

ஒரு கன சதுரத்தின் மொத்தப் புறப்பரப்பு 726 செ.மீ$^2$ எனில் அதன் பக்கப் பரப்பைக் காண்க

(A) 384 $cm^2$
384 செ.மீ$^2$

(B) 484 $cm^2$
484 செ.மீ$^2$

(C) 464 $cm^2$
464 செ.மீ$^2$

(D) 364 $cm^2$
364 செ.மீ$^2$

(E) Answer not known
விடை தெரியவில்லை

181. The principal which amounts to ₹ 1,331 at 10% p.a. in 3 years, compounded yearly is __________

10% ஆண்டு வட்டியில், ஆண்டுக்கொருமுறை வட்டி கணக்கிடப்பட்டால், 3 ஆண்டுகளில் _______ என்ற அசலானது ₹ 1,331 தொகையாக ஆகும்.

(A) ₹ 1,000

(B) ₹ 1,100

(C) ₹ 980

(D) ₹ 1,020

(E) Answer not known
விடை தெரியவில்லை

182. If the difference between the C.I. and S.I. for 2 years for a principal of ₹ 5,000 is ₹ 32 then find the rate of interest.

₹ 5,000 க்கு 2 ஆண்டுகளுக்கு கூட்டு வட்டிக்கும் தனிவட்டிக்கும் இடையேயுள்ள வித்தியாசம் ₹ 32 எனில் வட்டி வீதம் காண்க.

(A) 4%

(B) 2%

(C) 8%

(D) 6%

(E) Answer not known
விடை தெரியவில்லை

183. At what time will ₹ 5,600 increase upto ₹ 6,720 at 6% Simple Interest per annum?

₹ 5,600 ஆண்டுக்கு 6% தனி வட்டி வீதத்தில் எத்தனை ஆண்டுகளில் ₹ 6,720 ஆக உயரும்?

(A) $3\frac{1}{3}$ years
$3\frac{1}{3}$ ஆண்டுகள்

(B) $2\frac{1}{2}$ years
$2\frac{1}{2}$ ஆண்டுகள்

(C) $4\frac{1}{3}$ years
$4\frac{1}{3}$ ஆண்டுகள்

(D) $6\frac{1}{3}$ years
$6\frac{1}{3}$ ஆண்டுகள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

184. Ravi borrowed ₹ 13,500 from a bank at a particular rate of simple interest. After $4\frac{1}{2}$ years he paid ₹ 20,790 to settle his debt. Find the rate of interest?

இரவி என்பவர் ஒரு வங்கியில் தனிவட்டி முறையில் ₹ 13,500 கடனாகப் பெற்று $4\frac{1}{2}$ ஆண்டுகள் கழித்து ₹ 20,790 செலுத்தினால், கடனுக்கான வட்டி வீதம் எவ்வளவு?

(A) 12%

(B) 15%

(C) 20%

(D) 10%

(E) Answer not known
விடை தெரியவில்லை

185. If $a : b = 5 : 9$ and $b : c = 4 : 7$ find $a : b : c$?
$a : b = 5 : 9$ மற்றும் $b : c = 4 : 7$ எனில் $a : b : c$ விகிதம் காண்க.

(A) 20 : 36 : 63
(B) 63 : 36 : 20
(C) 36 : 63 : 20
(D) 20 : 63 : 36
(E) Answer not known
விடை தெரியவில்லை

186. Six bells commence tolling together and toll at intervals of 2, 4, 6, 8, 10 and 12 seconds respectively. In 30 minutes, how many times do they toll together?
6 மணிகள் 2, 4, 6, 8, 10 மற்றும் 12 வினாடிகள் இடைவெளியில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. 30 நிமிடங்களில் அம்மணிகள் எத்தனை முறை சேர்ந்து ஒலிக்கும்?

(A) 16
(B) 14
(C) 19
(D) 13
(E) Answer not known
விடை தெரியவில்லை

187. Find the least number which is a perfect square and is divisible by each of the numbers 20, 25 and 30.
20, 25 மற்றும் 30 ஆகிய எண்களால் வகுபடக் கூடிய மிகச்சிறிய முழுவர்க்க எண்

(A) 400
(B) 9000
(C) 3000
(D) 900
(E) Answer not known
விடை தெரியவில்லை

188. The HCF of $3t^2 + 2t - 8$ and $12t^2 - 22t + 8$ is ________

$3t^2 + 2t - 8$ மற்றும் $12t^2 - 22t + 8$ ஆகியவற்றின் மீ.பொ.வ

(A) $(t + 2)(3t - 4)(2t - 1)$

(B) $3t - 4$

(C) $(2t + 1)(3t + 4)$

(D) $(t + 2)(3t + 4)$

(E) Answer not known
விடை தெரியவில்லை

189. The sum and difference of the LCM and HCF of two numbers are 592 and 518 respectively. If the sum of the numbers is 296, then the numbers are ________

இரண்டு எண்களின் மீ.பொ.ம மற்றும் மீ.பொ.வ ஆகியவைகளின் கூட்டுத்தொகை மற்றும் வேறுபாடு முறையே 592 மற்றும் 518 அந்த இரண்டு எண்களின் கூட்டுத்தொகை 296 எனில், அந்த எண்கள்

(A) 101 and 195
101 மற்றும் 195

(B) 296 and 37
296 மற்றும் 37

(C) 111 and 185
111 மற்றும் 185

(D) 296 and 185
296 மற்றும் 185

(E) Answer not known
விடை தெரியவில்லை

190. There are 50 students in a class. If 14% are girls, find the number of boys in the class?

ஒரு வகுப்பில் மொத்தம் 50 மாணாக்கர்கள் உள்ளனர். அவர்களில் 14% பேர் மாணவிகள் எனில், வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை

(A) 7 boys
7 மாணவர்கள்

(B) 43 boys
43 மாணவர்கள்

(C) 36 boys
36 மாணவர்கள்

(D) 34 boys
34 மாணவர்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

191. Find the missing number in the given series :

4, 18, ____ , 100, 180, 294, 448

4, 18, ____ , 100, 180, 294, 448 என்ற தொடரில் உள்ள விடுபட்ட எண்ணைக் காண்க

(A) 48

(B) 24

(C) 16

(D) 12

(E) Answer not known
விடை தெரியவில்லை

192. How many terms in the series 1 + 5 + 9 + ... must be added so that their sum is 190?

1 + 5 + 9 + ... என்ற தொடரில் எத்தனை உறுப்புகளைக் கூட்டினால் கூடுதல் 190 கிடைக்கும்?

(A) 10

(B) 20

(C) 100

(D) 190

(E) Answer not known
விடை தெரியவில்லை

193. Find the sum of the series 11 + 12 + 13 + .... + 31
கூட்டுப்பலன் காண்க : 11 + 12 + 13 + .... + 31

(A) 441
(B) 496
(C) 55
(D) 465
(E) Answer not known
விடை தெரியவில்லை

194. Find the missing number in the series

3, 20, 63, 144, 275, ____.
3, 20, 63, 144, 275, ____ என்னும் தொடரின் விடுபட்ட எண்

(A) 354
(B) 468
(C) 548
(D) 554
(E) Answer not known
விடை தெரியவில்லை

195. If $ARE = 24$, $DOG = 26$, then $WAS$ refers to __________
$ARE = 24$, $DOG = 26$ என்று குறித்தால் $WAS$ என்பது எதைக் குறிக்கும்?

(A) 42
(B) 43
(C) 44
(D) 41
(E) Answer not known
விடை தெரியவில்லை

196. If “DAY” stands for “ADV” then “SUN” stands for ________
“DAY” என்பது “ADV” என்பதைக் குறித்தால் “SUN” என்பது எதைக் குறிக்கும்?

(A) GXK
(B) PUK
(C) PXQ
(D) PXK
(E) Answer not known
விடை தெரியவில்லை

197. In how many ways can you answer 3 multiple choice questions, with the choices A, B, C and D?
மூன்று பலவுள் தெரிவு (multiple choice questions) வினாக்களில் A, B, C மற்றும் D தெரிவுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்க எத்தனை விதமான வழிகள் உள்ளன?

(A) 4
(B) 3
(C) 12
(D) 64
(E) Answer not known
விடை தெரியவில்லை

198. If $A \to 1, B \to 2, C \to 3....Z \to 26$, then $\sqrt{Y} + B^C \neq$ ?
$A \to 1, B \to 2, C \to 3....Z \to 26$ எனக் கொண்டால் $\sqrt{Y} + B^C \neq$ ?

(A) $E + F$
(B) $S - F$
(C) $I + D$
(D) $J + C$
(E) Answer not known
விடை தெரியவில்லை

199. Find the probability of getting the number 9, when a usual dice is rolled?

ஒரு பகடையை உருட்டிவிடும் போது 9 கிடைப்பதற்கான நிகழ்தகவு?

(A) 9

(B) 1

(C) 0

(D) 2

(E) Answer not known
விடை தெரியவில்லை

200. In how many ways, can the students answer 3 true or false type questions in a slip test?

சரியா, தவறா என விடையளிக்கும் 3 வினாக்கள் அடங்கிய ஒரு சிறு தேர்வில் மாணவர்கள் மொத்தம் எத்தனை வழிகளில் விடையளிக்க முடியும்?

(A) 4

(B) 2

(C) 8

(D) 3

(E) Answer not known
விடை தெரியவில்லை